வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 26.01.2022 புதன்கிழமை | இதழ் : 52 | பக்கங்கள் : 16

# கொழும்பு சென்று திரும்புவோர் பலருக்கு கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம், ஜன. 26

தென்னிலங்கைக்கு பொதுப் போக்கு வரத்தில் பயணித்து வடக்கு மாகாணத்துக்கு திரும்புவோருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று பரவலாகக் கண்டறியப்படுகிறது என்று சுகாதார அதிகாரிகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### யாழ். போதனாவில் இன்று கலந்துரையாடல்

அத்துடன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுக்கு வருகை தருவோரிடம் நேற்றுமுன்தினமும் நேற்றும் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்ரிஜென் பரிசோதனையில் பெருமளவானோர் கோவிட்-19 தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை தகவல்கள் குறிப்பிட்டன.

தென்னிலங்கையில் நாளாந்தம் கண்டறியப்படும் கோவிட்-19 நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் வடக்கு மாகாணத்திலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றன என்று சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

15

## அறிகுறி வெளிப்படுத்தாது தாக்குகிறது ஒமைக்ரோன்

### தொற்றாளர் தொகையும் பாரியளவு உயர்வு சுகாதார சேவைகள் பணியகம் எச்சரிக்கை

கொழும்பு, ஜனவரி 26

ஒமைக்ரோன் வைரஸ் தாக்கத்தின்போது எந்தவித அடையாளமும் வெளிப்படுத்தாது வைரஸ் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது, பாரதூரமான அளவில் தொற்றளார்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை வெளிப்படுத்துவதாகவும் சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

15

## ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர்கள் உயர்வு!

கொழும்பு, ஜன. 26

ஒமைக்ரோன் திரிபு பரவலால் நாட்டில் மருத்துவமனையில் சேர்பவர்களின் எண்ணிக்கை 10 வீதத்தால் உயர்ந்துள்ளது. அத்துடன், சிகிச்சையில் ஒட்சிசன் வாயு தேவையுடையவர்களின் எண்ணிக்கையும் 8 வீதத்தால் அதிகரித்துள்ளது.

கோவிட் 19 சிகிச்சை ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி இந்தத் தகவலை வெளியிட்டார். அவரின் கருத்தின்படி 5,300 - 5,400 பேர் வரை கொரோனா தொற்றால் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இது மருத்துவமனைகளின் படுக்கை திறனில் 40 வீதத்தை உள்ளடக்கியது. தற்போது, மருத்துவமனைகளில் நெரிசல் இல்லை என்றபோதிலும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாமையாலும்,

15

## தயா மாஸ்டருக்கு ஒத்திவைத்த சிறை

### வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பு



வவுனியா, ஜன. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளராக செயற்பட்ட தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி மீது தொடரப்பட்ட வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டர் போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தார். இந்த நிலையில் அவருக்கு எதிராக பயங்கரவாத தடைச்

15

## உயர்கிறது கொரோனா பலி!

கொழும்பு, ஜன. 26

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி நேற்று முன்தினம் மேலும் 17 பேர் உயிரிழந்தனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

12 ஆண்களும் 5 பெண்களும் உயிரிழந்தனர் என்பதுடன், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 14 பேரும் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்

15

## 55 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கை கடற்பரப்பில் கைதான 55 இந்திய மீனவர்களை நேற்று நிபந்தனையுடன் விடுதலை செய்தது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

நெடுந்தீவு மற்றும் எழுவைதீவு அருகே கடந்த வருடம் டிசெம்பரில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 55 பேருக்

15

## பிரதமர் மஹிந்தவுக்கு வாயில்சத்திரசிகிச்சை!



கொழும்பு, ஜன. 26

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்றுமுன்தினம் வாயில் சிறிய சத்திர சிகிச்சை செய்யப்பட்டதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

15

## மணல் கடத்தல்கள் 610 வழக்குகள் பதிவு

கிளிநொச்சி, ஜன. 26

சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் நிபந்தனைகளை மீறிய விதத்தில் மணல் கொண்டு சென்றமை என்பவற்றுக்கு எதிராக, கிளிநொச்சி மாவட்டத்தில் 610 வழக்குகள் கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பொலி

15

## மீண்டும் அஜித் ரோஹண!



கொழும்பு, ஜன. 26

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக மீண்டும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நியமிக்கப்பட்டுள்ளார் என்று இலங்கை பொலிஸ் திணைக்களம் நேற்று அறிவித்தது.

தற்போதைய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ, ஊடகங்களைக் கையாள்வதில் சற்று பின்னடைவை எதிர்நோக்கியுள்ள நிலையிலும், அண்மையில் அவர் வெளியிட்ட சில கருத்துக்கள் சமூகத்தில் பலத்த விமர்சனங்களுக்கு உள்ளான நிலையிலும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் மாற்றம் கொண்டு வர தீர்மானம் எடுக்கப்

15

## அரசியல் கைதிகள் என எவரையும் அடையாளப்படுத்த விரும்பவில்லை

### விரைவில் தீர்வு என்கிறார் நீதி அமைச்சர்!



கொழும்பு, ஜன. 26

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் எவரையும் அரசியல் கைதிகள் என அடையாளப்படுத்த நாம் விரும்பவில்லை. எனினும், இந்த விவகாரத்துக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை செய்வதன் மூலம் விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்

15

## நாளை வரை மின்வெட்டு கிடையாது

கொழும்பு, ஜன. 26

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எரிபொருள் கையிருப்பு போதுமானதாக இருப்பதால் நாளை வியாழக்கிழமை வரை மின்வெட்டு இடம்பெறாது என்று என இலங்கை

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ் தேசிய மக்கள் முன்னணி நேற்று முன்தினம் நீண்ட தொரு அறிக்கையை வெளியிட்டிருந்தமை வாசகர்கள் அறிந்தது தான்.

ஆனால் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் பல விடயங்கள் குறித்து ஊர்க்குருவியிடம் சில கேள்விகள் இருப்பதால் அதன் சில பகுதிகளை கீழே தருகின்றேன்.

'.....சர்வதேச சமூகமானது, இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் யாப்பை உரு வாக்க வேண்டுமென இலங்கை அரசைத் தொடர்ந்து வலி யுறுத்தி வருகின்றது. அத்தகைய சர்வதேச நெருக்கடி காரண மாகவே, கடந்த அரசு 2016ஆம் ஆண்டில் புதிய அரசியல் யாப்பினைத் தயாரிக்கும் முயற்சியை ஆரம்பித்திருந்தது.

தற்போது ஆட்சியிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவும், சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே, புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கான குழுவினை கடந்த 2020 இறுதியில் நியமித்திருந்தார்......'

அந்த நீண்ட அறிக்கையில் இருந்து ஒருசிறிய பகுதி இது.

எந்த சர்வதேசம் அப்படியொரு அழுத்தம் கொடுக்கிறது? அது எப்படி இவர்களுக்கு தெரியும்? என்ற கேள்வி எமக்குள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

யுத்தம் முடிந்து ஒரு தசாப்தமாக யுத்த குற்றங்களுக்கு நீதி வேண்டி நாம் நடாத்திய போராட்டங்களால் இதுவரை எந்த அடைவைத் தமிழ் மக்கள் பெற்றிருக்கிறார்கள்? சர்வதேச ரீதி யாக இலங்கை இனப்பிரச்னை குறித்து சர்வதேச தீர்மானம் ஒன்றில் முதல் முதலில் பேசப்பட்டது கடந்த ஜெனிவா தீர்மா னத்தில் மாத்திரமே. அதிலும் இந்த 'பாழாய்ப்போன' பதின் மூன்றை முழுமையாக வலியுறுத்தவே கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் யாப்பை தயாரிக்குமாறு சர்வதேசம் அழுத்தம் கொடுக்கிறதாம்.

நல்லாட்சி அரசைக் கொண்டுவர தீவிர முயற்சி எடுத்த வெளிச்சக்திகள், தமிழர்களின் ஆதரவைப் பெறுவதற்காக சில உறுதிமொழிகளை வழங்கியிருந்ததும், வெற்றிபெற்றதும் அதற்காக அரசியலமைப்பை தயாரிக்க நல்லாட்சி முயன்றதும் என்னவோ உண்மைதான் என்றாலும், அரசை மாற்றுகின்ற வேலையுடன் தமது பணி முடிந்தது என்று அந்த 'சர்வதேசம்', தமக்கு விரும்பியவர்கள் தொடர்ந்து ஆட்சியிலிருக்க வேண்டு மெனில் சிங்கள மக்களின் ஆதரவை அந்த அரசு தக்கவைக்க வேண்டும் என்ற உண்மையை மனதில் வைத்துத்தான் காய்களை நகர்த்தியதே தவிர, தமிழர்களுக்கு தீர்வுபெற்றுக்கொடுப்பதை முதன்மைப்படுத்தவில்லை என்பது இரகசியமானதல்ல.

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகவே ராஜபக்ஷ அரசாங்கமும் புதிய அரசியல் யாப்பைத் தயாரிப்பதாக கூறும் மக்கள் முன்னணி, ஒன்றைப் புரிந்துகொள்ள மறுக்கின்றது.

சர்வதேச அழுத்தம் காரணமாக இந்த அரசு அப்படியொரு முயற்சியைச் செய்கின்றது என்றால், அதற்காக மாகாண சபைகளையே இல்லாமல் செய்யவேண்டும் என்ற கடும் கோட் பாடுகொண்ட புத்திஜீவிகளை தேர்வுசெய்து அந்த வரைபை தயாரிக்கும் பணியை தொடங்கியதும் இந்த சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவா?

இந்த அரசு கொண்டு வரவிருக்கும் உத்தேச அரசியலமைப்புச் சட்டத்தில் பதின்மூன்றும் இல்லாமலே போயிருக்கும் என்றே தெற்கில் நம்பப்படுகின்றது. அண்மையில் யாழ்ப்பாணம் வந்தி ருந்த பாட்டாளி சம்பிக்க ரணவக்க, இந்தக் குழுவால் முன்வைக் கப்படும் உத்தேச வரைவில் பதின்மூன்று இருக்காது என்றே தான் நம்புவதாக தெரிவித்திருந்தார்.

ஒரு காலத்தில் இவரும் இந்த பதின்மூன்றுக்கு எதிரானவர் என்பது வேறு விசயம்.

ஆனால், இவ்வாறு பலரும் எதிர்பார்ப்பதுபோல பதின்மூன் றில் இருக்கின்ற விசயங்களும் இல்லாமல் தாக்கல்செய்யப்படும் இந்த உத்தேச அரசியல்யாப்பில், பின்னர் பலத்த அழுத்தங்கள் காரணமாக சில வேளைகளில் பதின்மூன்றில் இருக்கின்ற விசயங்களும் உள்வாங்கப்படலாம்.

எதை வேண்டாம் என்று தமிழர்கள் கூறிவந்தார்களோ அதனையாவது உள்ளடக்குங்கள் என்று போராடுகின்ற நிலையை, தெற்கு கனகச்சிதமாக செய்யப்போகின்றது.

இந்த லட்சணத்தில், கோட்டாபய அரசாங்கம் கொண்டு வரவுள்ள புதிய ஒற்றையாட்சி அரசியலமைப்பில் 13ஆம் திருத்தத்திலுள்ள விடயங்கள் உள்ளடக்கப்படும்போது, அத்தகைய யாப்பினை ஆதரிக்காமல் இருக்க முடியாதென, மக்களை ஏமாற்றுவதற்காகவே இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்கிறது மக்கள் முன்னணி.

புதிய ஒற்றையாட்சி அரசியல் யாப்பு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு வரும்போது, மேற்படி தமிழ்த் தரப்புக் கோரிக்கையே அந்த யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக காட்டி, மேற்படி கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 பாராளுமன்ற உறுப்பினர்களும், அதனை ஏற்று ஆதரித்து வாக்களிக்கத் தயாராகியுள்ள சூழ்ச்சியையே குறித்த கடிதம் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள் ளது என்றும் முன்னணி கிளிச்சோதிடம் கூறியிருக்கிறது.

முதலில் பதின்மூன்றிலுள்ள விடயங்களாவது புதிய யாப்பில் இடம்பெறுகிறதா என்று பார்ப்போம். அதன்பிறகு, இந்த எம். பி.க்கள் ஆதரவு தருகிறார்களா என்பதை பார்ப்போமே!

- ஊர்க்குருவி

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 'டீல்' அரசியலுக்கு இடமில்லை!

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்



கொழும்பு, ஜன. 26

**ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 'டீல்' அரசியலுக்கு இடமில்லை. தனிநபர்கள் மற்றும் அவர்களின் சகாக்கள் செல்வாக்கு செலுத்த முடியாது. கொள்கைகளின் அடிப் படையிலேயே செயற்பாடுகள் இடம்பெறும் - என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மக்களை எப்படியெல்லாம் வதைக்க முடியுமோ அந்தள வுக்கு துன்பங்களை அள்ளி வழங்கியுள்ளது இந்த அரசு. வாழ்க்கைச்சுமை உச்சம் தொட் டுள்ளது. சந்தைக்குச்சென்றால் பொருள்களின் விலைகளை காணும்போது இரத்தம் கொதிக்கின்றது. மறுபுறத்தில் மத்திய வங்கியோ தொடர்ச்சி யாக பயணத்தை அச்சிட்டுவரு கின்றது. இதனால் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும். பொரு ளாதாரம் கடுமையாக பாதிக் கப்படும்.

இந்த அரசுக்கு மக்கள் பற்றி துளியும் கவலை இல்லை. தமக் கான பாதுகாப்பு மற்றும் தமது சகாக்களின் பாதுகாப்பு என்ப னவே ஆட்சியாளர்களுக்கு முக் கியம். அதனால்தான் மக்கள் நலன் பற்றி சிந்திக்காமல் தீர்மா னங்கள் எடுக்கப்படுகின்றன.

எமது ஆட்சியில் அரசியல் 'டீலுக்கு' இடமில்லை. மக்களின் கொள்கையுடன்தான் எமக்கு 'டீல்' இருக்கும். தேசிய கொள் கைகள் வகுக்கப்பட்டு, அதற் கேற்ற வகையில் ஆட்சி இடம் பெறும். தனிநபர்களின் செல் வாக்குக்கு இடமில்லை. பல மான சக்தியாக அடுத்து நடை பெறும் தேர்தல்களில் வெற்றி பெறுவோம் - என்றார். (அ)

# நிரந்தர நியமனம், சம்பள அதிகரிப்பு கோரி முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 26

வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் பிரதேச சபைக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட் டம் ஒன்றை மேற்கொண்டனர்.



வலி. மேற்கு பிரதேச சபை யின் மாதாந்த அமர்வு நேற்று ஆரம்பமானது. நேற்றைய கூட்டத்தை இடைநிறுத்தி விட்டு பிரதேச சபை உறுப்பி னர்களும் முன்பள்ளி ஆசிரி யர்களும் பிரதேச சபைக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெ டுத்தனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கு மாறு கோரியும், சம்பள அதி கரிப்பை கோரியும் இந்த கவன யீர்ப்பு போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

இது தொடர்பாக போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்தவர்கள் மற்றும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள் என பலர் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றுகின்றோம்.

30 வருடங்களுக்கு மேலாக சேவையைச் செய்து ஓய்வு பெறும் வயதிலும் முன்பள்ளி ஆசிரியர்கள் சேவை புரிந்து வருகின்றனர்.

நமக்கு வெறும் ஆறாயிரம் ரூபாவே வேதனமாக வழங்கப் படுகின்றது. தற்கால விலை வாசி அதிகரித்து காணப்படு கிறது. இந்த ஆறாயிரம் ரூபா ஆறு நாட்களுக்காவது போதுமா?

முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என நாங்கள் கடந்த பிரதேச சபை அமர்வில் தீர்மா னம் எடுத்துள்ளோம். அந்த தீர்மானத்தை ஜனாதிபதி மற் றும் கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம்.

ஒரு குழந்தை தாயிடம் இருந்து அடுத்த படியாக முன் பள்ளி ஆசிரியர்களிடமே வரு கின்றது. ஒரு தாய் செய்ய வேண்டிய அத்தனை கடமை களையும் நாங்கள் அந்த மாண வர்களுக்கு செய்கின்றோம். ஆனால் எங்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.

எனவே புதிய அதிகாரிகள் இதனை கவனத்தில் கொண்டு நமது பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டும் - என்ற னர்.

போராட்டக்காரர்கள் பதா கைகளை ஏந்தி கோமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# தண்ணீரூற்று சந்தை மீது தாக்குதல் மூன்று பேர் பொலிஸாரினால் கைது

முல்லைத்தீவு, ஜன. 26

முள்ளியவளை - தண்ணீ ரூற்று பொதுசந்தை மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்ப வத்துடன் தொடர்புடைய மூவரை முல்லைத்தீவு பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

தண்ணீரூற்று பொதுச்சந்தை மீது கடந்த 24ஆம் திகதி அதிகாலை நான்கு பேர் கொண்ட குழுவினர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதன்போது சந்தையின் காவலாளியான 60 வயதுடைய நபர் காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சந்தையை குத்தகைக்கு எடுத்தமை தொடர்பில் எழுந்த பிரச்னையின் விளைவாக நள்ளிரவில் வந்த கும்பல் ஒன்று பொதுச் சந்தைக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முள்ளியவளை உப பிரதேச சபையின் பொறுப்பதிகாரி முறைப் பாட்டை பதிவு செய்தார்.

தாக்குதல் நடத்தியமை சி. சி.ரிவி கமெராவில் பதிவாகி யுள்ளது.

இந்த நிலையிலேயே மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளதுடன் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
26.01.2021 புதன்கிழமை
பிலவ வருடம், தை 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜே.வி.பியின் ஞானம்?

அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை சந்தித்திவரும் நிலையில் – முன்னாள் ஆயுத கிளர்ச்சி அமைப்பான ஜே. வி. பி. தமிழ் மக்கள் தொடர்பில் வழக்கத்துக்கு மாறான கருத்துக்களை தெரிவித்து வருகின்றது. ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, முதலில் தமிழ் மக்களின் பிரச்னையை தீர்ப்பதுதான் முக்கியமானதென்று அண்மையில் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களின் பிரச்னைதான் முதன்மையான பிரச்னை. அந்த பிரச்னையிருக்கும் வரையில், வெளிநாட்டு தலையீடுகள் இருந்து கொண்டுதான் இருக்கும். முதலில் தமிழ் மக்களின் பிரச்னையை தீர்க்க வேண்டும். ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களுக் கென்று பிரத்தியேக பிரச்னை ஒன்றில்லை என்று கூறிவரும் நிலை யில்தான், ஜே. வி. பி – அதனை எதிர்க்கும் வகையில் இவ்வாறான கருத்தை கூறிவருகின்றது. ஆனால், இதே ஜே. வி. பியும் ஆரம் பத்தில் மஹிந்தவின் முகாமில்தான் அடைக்கலம் அடைந்திருந்த வர்கள்.

இவ்வாறானதொரு நிலையில், ஜே. வி. பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹெந்துன்நெந்தி – ஒரேயொரு தூபியை நிர்மாணித்து, விடுதலைப் புலிகளையும் நினைவுகூரலாமென்று தெரிவித்திருக்கின்றார். தென்பகுதி சிங்கள கட்சிகள் மத்தியிலிருந்து இப்படியான கருத்துக்கள் வெளிவருவது ஆச்சரியமான ஒன்றுதான், என்றாலும், இவ்வாறான கருத்துக்கள் உண்மையான புரிதலின் அடிப்படையில் வருகின்றதா அல்லது, மீண்டும் வெளிநாட்டு தரப்புக்கள் தமிழர் பிரச்னையை காரணம் காட்டி உள்நுழைந்துவிடுமோ என்னும் அச்சத்திலிருந்து வருகின்றதா?

சிங்கள அரசியல் தரப்புக்கள் நெருக்கடியிலிருக்கும்போது, இனிப்பான அரசியலை செய்வது வழமையான ஒன்றுதான். இதுவும் அவ்வாறானதோர் இனிப்பான அரசியல்தானா? அரசாங்கத்திற்கு தலைமை தாங்குவதற்கு தாம் தயாரென்றும் அண்மையில் ஜே. வி. பி. அறிவித்திருந்தது. ஜே.வி.பி போன்றதொரு மூன்றாம் அணி இதுவரையில் அதிகாரத்தை கைப்பற்ற முடியவில்லை. ஒரு குறிப்பிட்டளவு வாக்கு வங்கியோடுதான் இப்போதும் ஜே. வி. பி இருக்கின்றது.

ஆனால், ஒரு நெருக்கடி நிலைமை இவ்வாறான சிறிய மூன்றாம் அணியொன்றையும் ஆட்சியில் ஏற்றிவிடாதென்று கூறமுடியாது. அது முற்றிலும் சிங்களவர்களின் கைகளில்தான் தங்கியிருக்கின்றது. ஆனால், அப்படியானதொரு சூழலில் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் ஆதரவு ஜே. வி. பி. போன்ற அணிக்கு கட்டாயம் தேவைப்படும். இதன் காரணமாகவும் ஜே.வி.பியினர் இவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்தலாம். ஜே. வி. பி. நல்ல நோக்கில் தமிழ் மக்கள்மீது கரிசனை காண்பித்தால் – அது, வரவேற்கத்தக்கதுதான். ஆனால், தென்னிலங்கை அரசியல் தொடர்பில் நமக்குள்ள அனுபவங்கள் எதனையும் முன்னெச்சரிக்கையுடன் அணுகுமாறே வலியுறுத்துகின்றது.

ஆறு தமிழ் தேசிய கட்சிகள் இந்தியாவை நோக்கி அனுப்பிய கோரிக்கை, தென்னிலங்கையிலுள்ளவர்களை சற்று பதற்றமடையச் செய்திருப்பது போலும் தெரிகின்றது. பொதுஜன பெரமுனவை தவிர, ஏனைய தரப்புக்கள் அனைவரும் இதனை சாதாரணமாக நோக்க முடியாதென்று கூறிவருகின்றனர். ஏனெனில், அரசாங்கம் விடயங்களை செய்யாத காரணத்தால்தான் தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி செல்கின்றன. இவ்வாறானதொரு சூழலில்தான் இந்தியாவின் முன்னைய தலையீடும் நிகழ்ந்தது.

இது தொடர்பிலும்கூட ஜே. வி. பி. சிந்தித்திருக்கலாம். 13ஐ அகற்ற வேண்டுமென்று தெற்கின் சிங்கள கடும்போக்கு பௌத்த தேசியவாத தரப்புக்கள் ஒற்றைக் காலில் நிற்கின்றன. இந்த நிலையில் அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழர்கள் மத்தியிலிருந்தும் சில குரல்கள் எழுகின்றன. இந்த இரண்டும், பதற்றமான நெருக்கடியை ஏற்படுத்திவிடலாமென்று, சிந்திக்கும் சிங்கள தரப்பொன்று எண்ணினால் அதில் வியப்பில்லை. ஏனெனில், கடந்த காலத்தில் சிங்கள தரப்புக்கள் இழைத்த தவறுகள்தான், வெளியாரின் தலையீடுகளுக்கு வழிசமைத்தது.

# வடக்கு - கிழக்கு மக்களின் இல்லங்களை அலங்கரித்த இந்திய சுதந்திர புருஷர்கள்!

அலசுவது இராஜதந்திரி

இந்தியாவின் 73ஆவது சுதந்திர தினம் இன்று புதுடில்லியில் கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டு இந்திய குடியரசு தினத்தின் முக்கிய நிகழ்வாக இந்திய சுதந்திரத்துக்காக ஆயுதமேந்தி இந்திய தேசிய இராணுவம் என்ற அமைப்பை உருவாக்கிய சுபாஷ் சந்திர போஸின் சிலை புதுடில்லியில் திறந்து வைக்கப்படுகின்றது.

நேதாஜியின் இந்தச் சிலை ஹொலோகிராம் என்று அழைக்கப்படும் (Hologram) மின் ஒளியிலான முப்பரிமாண வடித்தைக் கொண்டதாக அமைந்துள்ளது.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்திலேயே முன்பு பிரிட்டனின் ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரின் சிலை அமைக்கப்பட்டிருந்தது. ஐந்தாவது ஜோர்ஜ் மன்னர் இன்றைய பிரிட்டிஷ் மகாராணியார் எலிசெபத்தின் பாட்டனார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய குடியரசு தினத்தோடு நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125ஆவது பிறந்த தினமும் ஜனவரி 23ஆம் திகதியாக இருக்கின்ற காரணத்தினால் அவரது சிலை திறப்போடு இந்தியாவில் இத்தடவை நேதாஜி நினைவு கூரப்படுகின்றார்.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து நீக்க வேண்டும் என்பதில் மிகத்தீவிரமாக இருந்தவரே வங்காளத்தில் அவதரித்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கென அவர் இந்திய தேசிய இராணுவம் என்ற அமைப்பையும் அவர் உருவாக்கியிருந்தார். இந்திய தேசிய காங்கிரஸில் நேதாஜி ஓர் உறுப்பினராக இருந்தார். ஆயினும் அவர் தீவிரவாத போக்கை கடைப்பிடித்ததன் காரணமாக மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்றோர் அங்கம் வகித்த இந்திய தேசிய காங்கிரஸிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்.

இந்திய தேசிய காங்கிரஸில் அங்கம் வகித்த வேளை மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோருடன் முரண்பட்டவராகவும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் விளங்கியிருந்தார்.

இதன்பின்னரே அவர் இந்திய தேசிய இராணுவத்தை அமைத்து இராணுவச் சீருடையிலேயே அவர் தம்மை ஒரு சுதந்திர போராட்ட வீரராக வெளிப்படுத்திக் கொண்டார்.

அவர் பின்னால் ஆண்கள், பெண்கள் உட்பட ஏராளமான இந்தியர்களும் அணி திரண்டிருந்தனர். "எதிரியின் எதிரி எனது நண்பன்" (Enemy's Enemy is my friend) என்ற கோட்பாட்டை கொண்டவராக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் விளங்கினார்.

இதன்காரணமாக பிரட்டிஷ் அரசுக்கு எதிராக அன்றிருந்த நாடுகளுடன் அவர் தொடர்புகளை கொண்டிருந்தார். அன்று தாய்வானில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தாய்வான் வான்பரப்பில் கொல்லப்பட்டார். ஆனால், அவர் ஜப்பானிலிருந்து பயணித்த அந்த விமானத்தின் விபத்து ஒரு நாசகார


நேருவுடன் சுபாஸ் சந்திரபோஸ்

வேலையா அல்லது உண்மையிலேயே ஒரு விபத்தா என்பது இன்று வரை மர்மமாகவே இருக்கின்றது.

இந்திய சுதந்திர போராட்டம் வீறு கொண்டிருந்தபோது சுபாஷ் சந்திரபோஸ் தலைமையிலான தீவிரவாத போக்கின் அழுத்தமும் ஆங்கிலேயர்களை கௌரவமான முறையில் அஹிம்சை வழிக்கு மதிப்பளித்து இந்தியாவுக்கு சுதந்திரத்தை வழங்க தூண்டியதெனவும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8ஆம் திகதி ஜப்பானிய விமானமொன்றில் பறந்து கொண்டிருந்தபோதே தாய்வானில் விழுந்து நொருங்கி நேதாஜி சென்ற அவ்விமானம் விபத்துக்குள்ளாகியதில் அவர் பலியானார். நேதாஜியின் அஸ்தி இன்றுங்கூட பிரிட்டிஷாரை அன்று எதிர்த்து நின்ற ஜப்பான் தேசத்தில் ஒரு சமாதிக்கட்டடத்தினுள் வைக்கப்பட்டுள்ளது.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் தீவிரவாத போராட்டத்துக்கு அன்று சுமார் 21 இலங்கையர்கள் வரை ஆதரவளித்திருந்தனர் எனவும் அவர்களில் இலங்கையின் முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலவின் உறவினரான கிலாட்வின் கொத்தலாவல (Gladwin Kottalawela) முக்கியமானவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆங்கிலேயர்களுக்கு எதிரான இந்திய சுதந்திரப் போராட்டத்தால் கவரப்பட்ட இலங்கையர்கள், குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேச மக்கள் அண்மைக் காலம் வரை மகாத்மா காந்தி, ஜவஹர்வால் நேரு ஆகியோருடன் உருவப்படங்களுடன் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் உருவப் படத்தையும் தமது இல்லங்களின் சுவர்களில் மாட்டியிருந்தனர்.

இலங்கையில் எழுபதுகளில் தீவரவாத போராட்டத்தை வடக்கு - கிழக்கில் முன்னெடுத்த ஆயுதப்போராட்ட அமைப்பினரும் சுபாஷ் சந்திரபோஷை தமக்கு முன்னுதாரணமாக ஒரு தலைவராகவும் கொண்டிருந்தனர்.

எனவே, இந்தியா ஒரு பரிபூரண குடியரசாக தனது 73ஆவது குடியரசு தினத்தை இன்று கொண்டாடும் தருணத்தில் இந்திய சுதந்திர புருஷர்கள் வடக்கு - கிழக்கு மக்கள் மனதில் இடம்பிடித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகவே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 26 புதன்கிழமை**
**பிலவ வருடம் - தை 13**
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : நவமி




**மேடம்**
புத்துணர்ச்சி பெருகும். பிறரது நன்மதிப்பைப் பெறுவீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கு நல்ல செய்தி வரும். உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பாராத லாபம் வந்து திக்குமுக்காட வைக்கும். தந்தை நலமடைவார்.

**இடபம்**
தாமதித்துக் கொண்டிருந்த நன்மை இன்று தானாக நடைபெறும். பொறுமையால் வெல்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பு உண்டு. சமீபத்தில் ஏற்பட்டிருந்த தொல்லை ஒன்று நீங்கும்.

**மிதுனம்**
வாழ்க்கைத்துணையுடன் ஒற்றுமை பலப்படும். மகிழ்ச்சி கூடும். பல வகைகளில் நன்மை அளிக்கும் அதிர்ஷ்டம் தேடி வரும். அகங்காரம் தலைதூக்காமல் பணிவாக இருப்பது நல்லது.

**கடகம்**
வீட்டில் நடக்கும் சுபநிகழ்வுகளின் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். மன நிம்மதி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**சிம்மம்**
பல காலத்திட்டம் ஒன்று நிறைவேறி மகிழ்ச்சி அளிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டு. மனதில் உற்சாகம் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரித்து சந்தோஷம் தரும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் இன்று உற்சாகமாகப் பொழுது போகும். குழந்தைகள் பற்றிய கற்பனைக் கவலைகள் வேண்டாம். பல நாளாக விரும்பிய வெளிநாட்டுப் பணி வந்து மகிழ்விக்கும்.

**துலாம்**
எதிர்பாராத நன்மை வரும். உறவினரால் ஆதாயம் உண்டு. செலவுகள் அதிகரிக்கும். கருணை எண்ணம் வரும். நிம்மதி உண்டு. பேச்சில் இரட்டிப்பு கவனம் தேவை.

**விருட்சிகம்**
உங்களது பேச்சில் கவர்ச்சி அம்சம் கூடும். நட்பு வட்டம் விரியும். எதிர்பாராத வேலை வாய்ப்பு வரும். அதை உடனே ஏற்றுக்கொள்ளுங்கள். நம்ப வேண்டியவர்களை நம்பாமல் சிரமப்பட வேண்டாம்.

**தனுசு**
கோபத்தைக் கட்டுப்படுத்தி நன்மை காணுங்கள். கூடுதல் வருமானத்திற்கு புதிய வழியை கண்டு பிடிப்பீர்கள். நெருங்கியவரிடம் உங்களது கோபத்தை காட்டி சிரமப்படுத்தாதீர்.

**மகரம்**
குடும்பத்தினரின் செயல்பாடுகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தேவையற்ற விஷயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம். தாயாருக்கு உங்களால் சிரமம் வராதபடி கவனமாக இருங்கள்.

**கும்பம்**
வெளிநாட்டில் இருந்து வருமானம் வர வாய்ப்பு உள்ளது. குழந்தைகளால் ஏற்பட்ட மனஅழுத்தத்தை அவர்களே நீக்குவார்கள். விளையாட்டாகக்கூட யாருக்கும் தீமை செய்ய வேண்டாம்.

**மீனம்**
உங்களின் செயல் காரணமாக பிரிந்த குடும்பங்கள் இணையும். பொருட்களை கவனமாகப் பாது காத்துக் கொள்ளுங்கள். குழந்தைகள் முன்னேறுவர். நண்பரின் செயல் நன்மை அளிக்கும்.

# தமிழக மீனவர் படகுகளை இலங்கை அரசு ஏலம் விடுவது இந்தியர்களுக்கு தலைகுனிவு

## வன்மையாக கண்டிக்கிறார் விஜயகாந்த்

*சென்னை, ஜன. 26*

"தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடப்போவ தாக இலங்கை அரசின் அறி விப்பு கண்டனத்திற்குரியது" என தேமுதிக பொதுச்செயலாளர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக மீனவர்கள் தாங்கள் உழைத்து சம்பாதித்த பணத்தில் படகுகளை தயார் செய்து வருகின்றனர். அவர்களுக்கு இலவசமாகவோ, அரசாங்கமோ படகுகளை வழங்கவில்லை. இந்த நிலையில் தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை இலங்கை அரசு ஏலம் விடுவதாக அறிவித்துள்ளது இந்திய இறையாண்மைக்கு எதிரானது.

இலங்கை அரசின் இந்த முடிவு ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்களின் படகுகளை ஏலம் விடுவதற்கு இலங்கை அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. குடியரசு தின விழா கொண்டாடும் இந்த நேரத்தில் தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடுவதாக இலங்கை அரசு அறி வித்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது. எனவே, இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு தமிழர்களின் படகுகளை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். மேலும் தமிழக மீனவர்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று விஜயகாந்த் கூறியுள்ளார்.

# ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்கும் ஆணையத்தின் பதவிக்காலம் நீடிப்பு

*சென்னை, ஜன. 26*


மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரணை நடத்தி வரும் ஆறுமுகசாமி ஆணையத்தின் காலத்தை மேலும் 5 மாதத்திற்கு நீடிப்பு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

முதலமைச்சராக இருந்த நிலையில் ஜெயலலிதாவுக்கு திடீரென்று உடல் நலக்குறைவு ஏற்பட்டு சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் 5.12.2016 அன்று மரணமடைந்தார்.

அவரது மரணம் குறித்து பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்ட நிலையில், அதுபற்றி விசாரணை நடத்துவதற்காக சென்னை நீதிபதி ஏ.ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையத்தை தமிழக அரசு அமைத்து. இந்த ஆணையத்தின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்த நிலையிலேயே இந்த நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை ஆணையத்தின் காலகட்டத்தை மேலும் 5 மாதங்களுக்கு 24.6.2022 வரை நீட்டித்து அரசு உத்தரவிட வேண்டும் என்று அரசுக்கு விசாரணை ஆணையம் கடிதம் எழுதியிருந்தது.

அதை கவனமுடன் அரசு பரிசீலித்து, நீதிபதி ஏ.ஆறுமுகசாமி தலைமையிலான விசாரணை ஆணையத்தின் காலத்தை 24.6.2022 வரை நீடித்து உத்தரவிட்டடுள்ளது.



# குடியரசு தின விழா: சென்னையில் பலத்த பாதுகாப்பு!

*சென்னை, ஜன. 26*

இந்தியக் குடியரசு தினத்தையொட்டி இன்று அசாம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் பொலிஸார் பலத்த பாது காப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இன்று தமிழ்நாடு முழுவதும் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெறும் மெரினா காமராஜர் சாலையில் 5 அடுக்கு பாதுகாப்புடன், சுமார் 2,500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர். இது தவிர சென்னையின் மற்ற இடங்களில் 6,800 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

சென்னை சென்ட்ரல், கடற்கரை, எழும்பூர், பெரம்பூர், அரக்கோணம், தாம்பரம், காட்பாடி, அரக்கோணம், திண்டிவனம், திருவள்ளூர் உள்ளிட்ட முக்கிய ரயில் நிலையங்களில் 2,000 ரயில்வே பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குடியரசு தின விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் இந்த ஆண்டு வழக்கத்தை விட குடியரசு தின விழாவுக்காக கூடுதல் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாம்பன் ரயில் பாலத்தில் துப்பாக்கி ஏந்திய காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டு வருவதுடன், வெடிகுண்டு தடுப்பு மெட்டல் டிடெக்டர் கருவிகளைக் கொண்டு பாலம் முழுவதும் கண்காணித்து வருகின்றனர். ரயில் நிலையங்கள், வழிபாட்டு தலங்கள், தங்கும் விடுதிகள், வணிக வளாகங்களில் தொடர் சோதனை மற்றும் கண்காணிப்பு நடத்தப்பட்டு வருகிறது.

# தஞ்சையில் எம்ஜிஆர் சிலை உடைப்பு

*தஞ்சாவூர், ஜன. 26*


தஞ்சாவூர் மாவட்டம், வடக்குவீதியில் மார்பளவிலான எம்.ஜி.ஆர் சிலை உடைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழகத்தில் பொது இடங்களில் நிறுவப்பட்டுள்ள சிலைகள் சேதப்படுத்தப்படுவது என்பது ஆங்காங்கே நடந்து வருகிறது. இந்நிலையில், தஞ்சாவூர் மாவட்டம், வடக்கு வீதியில் மார்பளவிலான எம்.ஜி.ஆர் சிலை நேற்று அதிகாலை உடைக்கப்பட்டது.

அதிகாலை 5.00 மணியளவில் சிலை உடைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து இந்த தகவல் பரவியதால், சிறிது நேரத்திலேயே சம்பவ இடத்தில் அதிமுகவினர் குவிந்தனர். இதனால் அங்குப் பரபரப்பு நிலவியது.

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த தஞ்சை தெற்கு காவல் துறையினர் அங்கிருந்த பெட்டிக் கடையின் பின்புறம் எம்ஜிஆர் சிலையைக் கண்டெடுத்து மீண்டும் அதே இடத்தில் நிறுவினர். தற்போது சிலையை யார் உடைத்தது என்று அதிமுக அளித்த புகாரின் பேரில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

சிலை உடைக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும், அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி, "ஏழை எளியோர் பசி தீர்த்த வள்ளல், தமிழக மக்கள் இதயங்களில் என்றென்றும் நீங்கா புகழ் கொண்டிருக்கும் இதயக்கனி எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலை தஞ்சை வடக்கு வீதியில் சமூக விரோதிகள் சிலரால் சேதப்படுத்தப்பட்டுள்ளதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்று தெரிவித்தார்.



# நாட்டில் பரவி வருகிறது புதிய வைரஸ் காய்ச்சல்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 26**

**கொரோனா வைரஸ் பரவலுக்கு மேலதிகமாக நாட்டில் மற்றுமொரு புதிய வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலை தொடர்பில் மக்கள் அவதானமாக செயற்படவேண்டுமென அந்தச் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் மருவஹ் துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

இதேவேளை, ஒமைக்ரோன் மற்றும் புதிய கொரோனா திரிபிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் 05 ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிபுணர் குழுவினூடாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளை அடுத்தே இந்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த ஆலாசனைகளை எதிர்வரும் சில தினங்களில் அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்க எதிர்பார்த்துள்ளதாக அந்த சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் செனால் பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)



# கட்டுப்பாட்டை இழந்த கனரக வாகனம்: உடைந்து விழுந்தது பாலம்!

கொழும்பு, ஜன. 26

சிங்கராஜ மழைக்காடு எல்லையில் அமைந்துள்ள தொம்பகொட மற்றும் லங்காகம கிராமங்களை இணைக்கும் ஜிங்கா ஆற்றின் பிரதான கிளையாற்றின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்ட மெதெரிபிட்டிய பாலம் நேற்று முன் தினம் பிற்பகல் உடைந்து வீழ்ந்துள்ளது.

1980 ஆம் ஆண்டு தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாலமானது தெனியாயவிலிருந்து மெதிரிபிட்டிய ஊடாக நெலுவாவுக்கு பயணிப்பதற்கு வசதியாக அமைந்துள்ளது.

இந்த பாலம் கடந்த 2003 ஆம் ஆண்டு இலகுரக வாகனங்கள் மட்டும் செல்லும் வகையில் அகலப்படுத்தப்பட்டு போக்குவரத்துக்கு வழிவகுத்தது.

ஆனால், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு பாலத்தின் நிலையை ஆய்வு செய்த வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியாளர்கள் பாலம் ஊடாக மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களுக்கு மட்டுமே பயன்படுத்த அனுமதித்தனர்.

அதன்படி, பாலத்தில் கனரக வாகனங்கள் செல்லாத வகையில் தடுப்புகள் அமைக்கப்பட்டு இருந்தனர். எனினும் பின்னர் கிராம மக்கள் தடுப்புகளை அகற்றி, கனரக வாகனங்கள் செல்ல வீதியை திறந்துவிட்டதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் பாலத்தின் மீது ஹன்ரர் ஒன்று சென்று கொண்டிருந்தபோது பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது.

இந்த விபத்தால், ஹன்ரர் பாலத்தின் கீழ் பகுதியில் சிக்கியதுடன் சாரதி, அதில் இருந்த யாரும் காயமின்றி தப்பினர். (அ)

# போலி இரத்தினக் கற்களால் வியாபாரிகளுக்கு ஏமாற்றம்!

கொழும்பு, ஜன. 26

செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட போலி இரத்தினக் கற்கள் சந்தைக்கு வந்துள்ளமையால் இரத்தினக்கல் தொழிற்துறை சார்ந்தோர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என இரத்தினபுரி இரத்தினக்கல் சந்தைகளிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகப் பிரசித்தி பெற்ற இயற்கை இரத்தினக்கற்களுக்கு இரத்தினபுரி பிரதேசம் புகழ் பெற்று விளங்குகிறது. இப்பிரதேசத்தில் கிடைக்கும் நீலக்கல், புஷ்பராகம், மரகதம், வைடூரியம்,சிவப்பு, ஆர்நூல், பத்மராகம், கெவுடா, பசிங்கல் போன்ற இரத்தினக் கற்கள் போன்றே இந்த போலி இரத்தினக்கற்களும் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயமாக இப்பகுதிகளிலுள்ள பல பொலிஸ் நிலையங்களில் மற்றும் இரத்தினக்கல் அதிகாரசபையிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுளளன. போலி இரத்தினக்கற்களால் ஏமாற்றப்பட்டவர்கள் உரிய தகவல்களுடன் முறைப்பாடுகளைச் செய்யுமாறு இரத்தினக் கல் அதிகார சபை மற்றும் பாதுகாப்புத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

இரத்தினக்கல் வர்த்தக சந்தையில் அடிக்கடி இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதால் நடமாடும் இரத்தினக்கல் ஆய்வு கூடமொன்று இப்பிரதேசத்துக்கு அவசியம் என்பதை இத்தொழில் துறையில் ஈடுபட்டு வரும் வர்த்த கர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# முன்னாள் சுகாதார அமைச்சரால் மாணவர்களுக்கு சைக்கிள்கள்

வவுனியா, ஜன. 26

முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளருமாகிய மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கத்தினால் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பாடசாலை செல்லும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள தாயகம் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கட்சியின் அமைப்பாளர் ந.கருணாநிதி, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உறுப்பினர் சந்திரசேகரம், வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு புதிய உறுப்பினராக முன்மொழியப்பட்ட ரஞ்சினி ஜெயகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கையில் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்படும் அபாயம்!

கொழும்பு, ஜன. 26

இலங்கையில் குடிதண்ணீரை பெற்றுக் கொள்வதில் நெருக்கடி ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் குடிதண்ணீர் நெருக்கடி நிலை ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளர் ஏகநாயக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அதனை குறைப்பதற்கு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவேண்டும் என்றும் அவர் கூறினார். அத்தியாவசிய நடவடிக்கை களுக்கு முன்னுரிமை அளித்து குடிதண்ணீரை பயன்படுத்துமாறும் அவர் மேலும் மக்களை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கைதான தமிழக மீனவர்களின் படகுகள் ஏலம் முடிவை மீள் பரிசீலனை செய்யக் கோரிக்கை

கொழும்பு, ஜன. 26

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுப்பட்ட குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை எதிர்வரும் 7 ஆம் திகதி ஏல விற்பனைக்கு விடப்படுவதாக கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ள நிலையில் இதனை மனிதாபிமான அடிப்படையில் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் கடற்றொழில் அமைச்சிடம் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது:

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் குறைந்த அளவு கடற்பரப்பு இருப்பதனால் தமிழக மீனவர்கள் எல்லைத் தாண்டுவது முற்றிலும் அறியா செயலாகும். அவர்கள் மீன்பிடிக்கும் நோக்கத்தில் மட்டுமே கடற்பரப்புக்குள் வருகின்றனர். தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் அவர்கள் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. எனவே மனிதாபிமான அடிப்படையில் இந்த விடயத்தை கடற்றொழில் அமைச்சு மறுப்பரிசீலனை செய்ய வேண்டும்.

இந்த படகுகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் இரு நாட்டின் மீனவ சமூகத்தினருக்கும் இடையில் நட்புறவு வலுப்படும்.

மீனவர்களின் பிரச்னைக்கு இரு நாடுகளும் பேச்சுவார்த்தையின் ஊடாகவே சுமூகமான தீர்வை எட்ட முடியும். மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதால், மீனவர்கள் படகின்றி தொழிலுக்கு செல்ல முடியாமல் பாரிய பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை ஏலத்தில் விடும்பொழுது மீனவ சமூகத்தினர் மேலும் வாழ்வாதார நெருக்கடிக்குள் தள்ளப்படக்கூடிய சூழல் ஏற்படுகிறது. பொருளாதார ரீதியாக முன்னேறி வரும் மீனவ சமூகத்துக்கு இந்த நடவடிக்கை ஒரு முட்டுக்கட்டையாக அமையும். எனவே இவ்விடயத்தை மறுப்பரிசீலனை செய்ய வேண்டும்-என்றுள்ளது. (அ)

# ரூ.3,300 மில்லியன் போதைப்பொருள் மேலும் ஐந்து சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, ஜன. 26

இலங்கைக்கு தெற்காக 737 கடல் மைல் தொலைவில் சர்வதேச கடல் எல்லையில் சுமார் 3,300 மில்லியன் ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரச புலனாய்வு சேவை, கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது 330 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 11 பேர் முன்னதாக இரண்டு கப்பல்களில் கைது செய்யப்பட்டனர்.

இதற்கமைய குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள மொத்த சந்தேகநபர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

குறித்த போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய ஐவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் டுபாயில் உள்ளதோடு அவர் அங்கிருந்து இவ்வாறு வர்த்தகத்துக்காக போதைப்பொருளை அனுப்பியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# மற்றொரு அலையை தவிர்க்க பூஸ்டரை பெறுவது அவசியம்!

## மருத்துவர்கள் வலியுறுத்தல்

**கொழும்பு, ஜன. 26**

**இலங்கையில் மற்றொரு கொரோனா அலையைத் தவிர்க்க பொதுமக்கள் பூஸ்டர் தடுப்பூசியை விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பேராசிரியர் ஷர்மிளா டி சில்வா, இதுவரை மருத்துவமனைகளில் கூட்டம் நிரம்பி வழியவில்லை என்றாலும் ஒவ்வொரு நாளும் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

ஒமைக்ரோன் மாறுபாடு நாட்டில் வேகமாக பரவும் மாறுபாடாக மாறுகிறது என்ற அறிக்கைகளுக்கு மத்தியில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது டோஸைப் பெற்ற பலர் மூன்றாவது டோஸைப் பெறுவதற்கு அதே அளவு ஆர்வத்தைக் காட்டுவதில்லை என்பதை சுட்டிக் காட்டிய பேராசிரியர் டி சில்வா, தடுப்பூசி தொடர்பான பல கட்டுக்கதைகள் சமூகத்தில் வேரூன்றியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

மலட்டுத்தன்மை மற்றும் ஆண்மைக்குறைவு தடுப்பூசியின் பக்கவிளைவாக இருக்கும் போன்ற கட்டுக்கதைகளை நம்ப வேண்டாம் என்று பொது மக்களை கேட்டுக்கொண்ட அவர், நாட்டில் மற்றொரு கொரோனா அலையைத் தடுக்க ஒவ்வொரு நபரும் பூஸ்டர் டோஸைப் பெறவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினார். (அ)

# 6 மாத கட்டணம் செலுத்தாதோருக்கு குடிதண்ணீர் விநியோகம் துண்டிப்பு

கொழும்பு, ஜன. 26

ஆறு மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக நீர் விநியோக கட்டணத்தை செலுத்தாதவர்களுக்கு நீர் விநியோகத்தை துண்டிக்கும் செயற்பாடு மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 7,200 மில்லியன் ரூபாவை நீர் பாவனையாளர்கள் செலுத்தத் தவறியுள்ளதாகவும், ஆறு மாதங்கள் அல்லது 2000 ரூபாய்க்கு மேல் நிலுவையாகவுள்ள நீர்ப் பட்டியலுக்கான நீர் விநியோகத்தை துண்டிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சபையின் உதவிப் பொது முகாமையாளர் ஏகநாயக்க வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

27 இலட்சத்து 50,000 பேருக்கு மாதந்தம் 50 மில்லியன் கனமீற்றர் குடிதண்ணீரை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வழங்குகிறது.

மேலும் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2,100 மில்லியன் ரூபாயாக இருந்த நிலுவைக் கட்டண தொகையை செலுத்தாமையினால், டிசெம்பர் மாதமளவில் அத்தொகை 7,200 மில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளது.

மாதாந்த குடிதண்ணீர் கட்டணத்தை 14 நாட்களுக்குள் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு அடுத்த மாதப் பட்டியலில் 1.5 சதவீத தள்ளுபடியும், பணம் செலுத்த தாமதப்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு மாதாந்த பில்லில் 2.5 சதவீதம் தாமதக் கட்டணமும் அறவிடப்படும் என்று உதவி பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# தோட்ட வைத்தியசாலைகளை பொறுப்பேற்கிறது அரசாங்கம்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜன. 26

பெருந்தோட் டப்பகுதிகளில் உள்ள 450 சுகாதார நிலையங்களில் முதற்கட்டமாக 59 சுகாதார நிறுவனங்களை மாகாண சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல முன்வைத்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன் போது அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ்... 

# சிமெந்தை அதிக விலைக்கு விற்போர் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜன. 26

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு சிமெந்து விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காண நுகர்வோர் விவகார அதிகார சபை நாடளாவிய ரீதியில் சோதனைகளை நடத்தி வருகின்றது.

அதன்படி, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி, குருநாகல், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அநுராதபுரம், காலி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் 56 சிமெந்து விற்பனை நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

சிமெந்துகளை விற்பனை செய்ய மறுப்பது, இருப்பு உள்ளபோது பற்றாக்குறையை காரணம் காட்டி, பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் விற்பனை செய்தல் மற்றும் பங்குகளை மறைத்து வைப்பது ஆகியவை நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் குற்றங்களாகக் கருதப்படுகின்றன.

அதன்படி, சட்டத்தை மீறும் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)



# கோடரிகள், வாள்கள் மானிப்பாயில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 26

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேலக்கை பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாகவுள்ள காணி ஒன்றிலிருந்து வாள்கள், மற்றும் கோடரிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த காணியில் மிக இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 09.30 மணியளவில் மானிப்பாய் பொலிஸாரினால் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

சம்பவத்தில் 2 கோடரிகள், நீளமான வாள் ஒன்றும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ள போதும், எவரும் கைது செய்யப்படவில்லை. அது தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கட்டுத்துவக்கு வெடித்ததால் முல்லைத்தீவில் ஒருவர் காயம்

முல்லைத்தீவு, ஜன. 26

முல்லைத்தீவு - கருநாட்டுக்கேணிப் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி பகுதியில் நேற்று முன்தினம் மாலை வயலுக்கு செல்லும் போது கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

இதில் 48 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்து



வமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க 40ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 26

விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 40,000 மில்லியன் ரூபாயை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனை அடுத்து 10 இலட்சத்து 49 ஆயிரம் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்

மேலும் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி சாதகமான விளைச்சலைப் பெறாத விவசாயிகளுக்கு மாத்திரமே நட்டத்துக்கான வழங்கப்படும் என அவர் மேலும் கூறினார். (அ)

# ஒமைக்ரோன் அறிகுறிகள் பொதுமக்களே அவதானம்

கொழும்பு, ஜன. 26

ஒமைக்ரோன் வைரஸ் திரிபு அறிகுறிகள் மிகவும் குறைவாக இருப்பதாக சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர். அதற்கமைய, ஒமைக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலேசான இருமல், தடிமன் மற்றும் இலேசான தொண்டை நோவு போன்ற சில அறிகுறிகள் மட்டுமே இருப்ப தாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதிக காய்ச்சல் போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படாது என்பது மற்றொரு முக்கிய விடயமாகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எனவே, காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்கள் உடனடியாக வைத்தியரை நாடுவதும் சிறந்ததென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடு முழுவதும் ஒமைக்ரோன் வைரஸ் திரிபு வேகமாக பரவி வருவதாகவும் நாளாந்தம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்த வைரஸ் திரிபினால் பாதிக்கப்பட்ட அதிகளவானோர் அடையாளம் காணப்படுவதாகவும் கொழும்பு லேடி ரிச்வே சிறுவர் வைத்தியசாலையின் சுவாச மற்றும் குழந்தை நல மருத்துவர்கள் நிறுவகத்தின் செயலாளர் விசேட வைத்தியர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடு வழமைக்கு திரும்பியிருக்கும் நிலையில் மக்கள் தேவையற்ற பயணங்களை மேற்கொள்வதே இந்த நிலைமைக்கு முக்கிய காரணம்எனவும்அவர்மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# அடுத்த சில நாட்களுக்கு தடையின்றி மின்சாரம்!

கொழும்பு, ஜன. 26

போதியளவு எரிபொருள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மின்வெட்டுக்கான தேவை ஏற்படாது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் வரை 100 மெற்றிக் தொன் எரிபொருளை பெற்றுக்கொண்டதையடுத்து மின்சார சபையினால் எவ்வித இடையூறும் இன்றி மின்சாரத்தை விநியோகிக்க முடிந்தது.

இலங்கை மின்சார சபைக்கு போதியளவு எரிபொருள் கிடைக்கப்பெற்றதன் காரணமாக, திட்டமிட்ட மின்வெட்டு மேற்கொள்ளப்படவில்லை எனவும் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சார சபைக்கு போதியளவு எரிபொருள் கையிருப்பு கிடைத்துள்ளதால், அடுத்த சில நாட்களுக்கு எந்தவித இடையூறும் இன்றி மின்சாரத்தை வழங்க முடியும் என ஒன்றியம் மேலும் கூறியுள்ளது. (அ)

# ஆட்சியாளரின் சூழ்ச்சிக்கு பலியாகாது தமிழக மீனவர்கள் பிரச்னைக்கு தீர்வு!

## தமிழ் மக்கள் கூட்டணி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 26

**தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடுவதை கடற்றொழில் கூட்டுறவுச்சங்கத் தலைவர் வரவேற்றுள்ளார். அது மீனவர்களின் மனநிலையை பிரதிபலிக்கலாம். ஆனால், இவ்விடயத்தில் இலங்கை இந்திய அரசுகள் மற்றும் அவற்றின் சட்டங்களுக்கு அப்பால் ஈழ, தமிழக மக்களின் நல்லுறவையும் அதன் எதிர்கால முக்கியத்துவத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ்மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன்.**

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடுவதற்கான முடிவும் அதனை வரவேற்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவரின் கருத்தும் தொடர்பாக, சம்மேளனத்தலைவரின் ஆதங்கமும் ஆவேசமும் நியாயமானது என்பதுடன் அது ஒட்டுமொத்த கடற்றொழிலாளர்களின் மனக்கிடக்கை என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஏனெனில் இழுவைப் படகுகளால் எமது கடற்றொழிலாளர்களின் அன்றாட வாழ்கையே கேள்விக்குறியாகிவிட்ட சூழ்நிலையிலும் சம்பந்தப்பட்ட அரசுகள் எவ்விதமான தீர்வையும் காணாது இழுத்தடித்து வருவதாகும்.

எனினும் இவ்விடயத்தில் இலங்கை இந்திய அரசுகள் மற்றும் அவற்றின் சட்டங்களுக்கு அப்பால் ஈழ, தமிழக மக்களின் நல்லுறவையும் அதன் எதிர்கால முக்கியத்தவத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. இதில் எம்மினத்தின் எதிர்காலமும் தங்கியுள்ளது என்பதையும் எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஈழ, தமிழக மக்களிடையே பகைமையை வளர்ப்பதில் இலங்கை ஆட்சியாளர்கள் எப்போதுமே முனைப்பைக் காட்டி வருகிறார்கள். கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவர்கள் தவறவிடுவதில்லை. இன்று தமிழர் ஒருவரே அத்துறைக்கு அமைச்சராக இருப்பது இலங்கை அரசுக்கு மேலதிக வாய்ப்பு.

கைப்பற்றப்பட்ட படகுகளை விற்பதன் மூலம் இப்பிரச்னையை தடுக்கமுடியாது.

எல்லை மீறிய மீனவர்களை சட்டத்தினால் தண்டிக்க வாய்ப்பிருந்தும் அயலுறவின் அடிப்படையில் சட்டமா அதிபரின் விதந்துரைப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவதையும் நாம் அறிவோம். ஆட்சியாளரின் சூழ்ச்சிக்கு பலியாகாமல் பிரச்னைக்கு தீர்வுகாண முயலவேண்டியது எமது கடமையாகும்.

எனவே இதனை விடுத்து இழுவைப்படகுகள் உட்பட தமிழக மீனவர்களால் எமது மீனவர்கள் பாதிப்படைவதைத் தடுப்பதற்குரிய நிலயான தீர்வை எட்டுவதற்கு இரு நாட்டு அரசுகளும் உடன் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். பிரச்னைக்கு சுமுகமான தீர்வைக்காணவே கடற்றொழில் அமைச்சர் முயல வேண்டும் என எதிர்பார்க்கிறோம்-என்றுள்ளது. (அ)



# இரு கவிதை நூல்கள் நல்லூரில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கவிஞர் வடிவழகையனின் இரண்டு கவிதை நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்ச் சங்கத்தின் பெருந் தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் கலந்துகொண்டார். தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆசியுரை வழங்கினார். வெளியீட்டு உரையை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா மற்றும் கவிஞர் வேல் நந்தகுமார் ஆற்றினார். மதிப்பீட்டு உரைகளை கவிஞர் கலாநிதி ச. முகுந்தன் , மூத்த விரிவுரையாளர் ஈ. குமரன் ஆகியோர் ஆற்றினார். நிகழ்வில் நூற்றுக்கணக்கான கவிதை ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்தனர். (அ)

# பொருளாதாரம் மேலும் சீரழியும்

## ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 26

பொருளாதாரம் மேலும் சீரழிவதைத் தடுப்பதற்கு, ஒமைக்ரான் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசு அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் ஒமிக்ரான் மாறுபாடு வேகமாகப் பரவி வருவதாகவும் இதனால் மக்கள் பாதிக்கப்பட்டால் அவர்களால் வேலை செய்து பொருளாதாரத்துக்கு பங்களிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய மாறுபாட்டின் ஆபத்துகள் மற்றும் பரவலைக் கட்டுப்படுத்த நடைமுறையில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நாட்டு மக்களுக்கு தெரிவிக்குமாறு அரசாங்கத்திடம் அவர் கேட்டுக் கொண்டார்.

தொற்றுநோயைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறை மிகவும் கடினமாக உழைத்துள்ளது என்று குறிப்பிட்ட அவர், எனினும் ஒமைக்ரான் மாறுபாட்டுடன் ஐரோப்பா எவ்வாறு போராடுகிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். அங்கு 50 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் ஒமைக்ரான் மாறுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார்.

ஒமைக்ரான் தொற்றால் இறப்பு வீதம் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளபோதும் ஒரு நபர் நோய்வாய்ப்பட்டால், அவர் சிறிது காலம் வேலை செய்ய முடியாது, இது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

தொற்றைக் கட்டுப்படுத்த அனைவரும் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைப் பெறுவதை உறுதி செய்யவேண்டிய அவசியம் உள்ளது என்றும் ரணில் சுட்டிக்காட்டினார்-என்றார். (அ)

# இறால் பண்ணைக்குள் வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

கொழும்பு, ஜன. 26

புத்தளம்-ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள இறால் பண்ணையொன்றுக்குள் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இறால் பண்ணைக்குள் ஒருவரது சடலம் இருப்பதாக பண்ணையின் உரிமையாளர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய அந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெவித்தனர்.

சடலம் பத்துளுஓயா-மகாமாலிய பகுதியைச் சேரந்த 02 பிள்ளைகளின் தந்தையுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. (அ)

# முல்லைத்தீவில் பொலிஸார் மூவருக்கு கொரோனா உறுதி

முல்லைத்தீவு, ஜன. 26

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பெண் உத்தியோகத்தர் ஒருவரும், இரண்டு ஆண் உத்தியோகத்தர்களுக்குமே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பாதிக்கப்பட்டவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் கொரோனா தடுப்புப் பிரிவு விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# மில்லியன்கணக்கான பைஸர் காலாவதியாகும் அபாயநிலை

கொழும்பு, ஜன. 26

இலங்கையினால் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள பைஸர் கோவிட் தடுப்பூசிகள் காலாவதியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இந்த விடயம் பற்றி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பைஸர் தடுப்பூசிகள் பயன்படுத்தப்படவேண்டும்.

அவ்வாறு பயன்படுத்த தவறும் தடுப்பூசிகள் காலாவதியாகும்.

பூஸ்டர் டோஸ்களுக்காக இவ்வாறு அரசாங்கம் பெருந்தொகை பைஸர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தியுள்ளது. பூஸ்டருக்காக அரசாங்கம் 14 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் கொள்வனவு செய்திருந்தது.

ஐந்து மில்லியன் தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.இன்னமும் ஒன்பது மில்லியன் தடுப்பூசிகள் களஞ்சியசாலைகளில் எஞ்சியுள்ளன-என்றார். (அ)

# 1 கிலோ நெல்லை 75 ரூபா வீதம் கொள்வனவு செய்ய தீர்மானம்

கொழும்பு, ஜன. 26

விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அரசாங்கம் நெல் இருப்பை பாதுகாப்பாக பேணுவதையும் நோக்காகக் கொண்டு பெரும் போகத்தில் அரசாங்க நெல் கொள்வனவு வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முதல் நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை ஊடாக ஒரு கிலோ நெல்லை தலா 75 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

குறித்த நெல் அறுவடையை கொள்வனவு செய்தல், நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக நேரடியாகவும் மாவட்ட செயலாளர்களால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை இயக்குவதன் மூலமும் மேற்கொள்ளப்படும்.

அதற்குத் தேவையான 29,805 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு அரச வங்கிகள் மூலம் வழங்கப்படும் என்ற யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# உணவு இறைமையும் அரிசி உற்பத்தியும்



தேசிய உணவுப்பாதுகாப்பில் அரிசி எல்லோராலும் பயன்படுத்தப்படும் முக்கிய உணவாகும். காலத்திற்கு காலம் ஏற்பட்ட நெருக்கடிகளால் கொள்கைரீதியான மாற்றங்கள் வந்ததன் காரணமாக அரிசியின் பெருமளவு உற்பத்தி அதிகரித்தது. உரத்திற்கான மானியம் போன்றவற்றை அரசாங்கம் கொண்டுவர வேண்டி இருந்தது. ஆனால் இந்தவருடம் கொள்கை ரீதியாக ஏற்பட்ட பின்னடைவுகள் தேசிய உணவு பாதுகாப்பை கேள்விக்குள்ளாகியுள்ளது. அன்னிய செலாவீனம் இல்லாத காலத்தில்கூட அரிசியை இறக்குமதி செய்வது அல்லது சீனாவிடம் மானியமாக கெஞ்சும் நிலமைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலமை உணவு ஒழுங்குமுறை தொடர்பான விவாதங்களை உருவாக்கியுள்ளது.

**தன்நிறைவு வரலாறு**

1953களில் இலங்கையில் 25 வீதமான அரிசியே உற்பத்தி செய்யப்பட்டது. மீதி 75 விதம் இறக்குமதி செய்யப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் கொரியாவில் யுத்தம் உருவாகியபோது இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் இறப்பரின் விலை அதிகரித்திருந்தது. இதனால் பொருட்களை இறக்குமதி செய்யக் கூடியதாக இருந்தது. சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் இருந்த பொருளாதார தொடர்புகளால் இலங்கை சீனாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்தது. கொரிய யுத்தத்தின் பின்னர் இறப்பரின் விலை குறைவடைய இலங்கையில் அந்நிய செலாவணியின்மை ஏற்பட்டது.

இந்த நிலையில் அரசு உலக வங்கியின் ஆலோசனைப்படி 1953ம் ஆண்டு அரிசியை மானிய அடிப்படையில் கொடுக்கமுடியாது என அறிவித்தது. அத்துடன் ஒரு கொத்து அரிசி 25 சதத்திலிருந்து 70 சதமாக விலை உயர்ந்தது. இதற்கு மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு வந்தது. 1953ம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் பெரும் ஹர்த்தால் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அது ஆட்சியாளர்கள் மத்தியில் பெரும் பீதியை உருவாக்கியது. அதற்கு பிறகு வந்த 25 வருடங்களில் அரிசியில் 90 வீத தன்னிறைவை அடைந்த நிலைக்கு மாறியிருந்தது. சனத்தொகை அதிகரிக்க அரிசி உற்பத்தியும் அதிகரித்திருந்தது.

இவ்வாறாக அதிகரித்த அரிசி உற்பத்தி கடந்த வருடத்தில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளால் குறிப்பாக இராசயன பசளை இறக்குமதியை திடீரென தடைசெய்தமையால் அரிசி உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை சந்தித்து. மீண்டும் 60 வருடங்களின் பின்னர் சீனாவிடம் அரிசியை கோரும் நிலைக்கு வந்துள்ளது.

நோபல் பரிசு பெற்ற இந்தியாவின் மிகப்பிரபலமான பொருளியலாளரான அமர்தயா சென் கூறுவது வரலாற்று ரீதியாக பஞ்சம் என்பது உணவு தட்டுப்பாடு அல்லது பற்றாக்குறை காரணமாக தோன்றுவதில்லை. மக்களிடம் உணவுகளை வாங்குவதற்கான வருமானம் இல்லாமை பொருட்களை வினியோகம் செய்வதில் இருக்கும் சவால்கள் மற்றும் இந்த பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரக்கூடிய ஜனநாயகத்தன்மை இல்லாத நிலமைதான் பஞ்சத்தை உருவாக்கும். இந்த நிலையில் ஸ்திரமுள்ள முற்போக்கான பொருளா தாரத்தை கட்டியெழுப்புவதற்கு எவ்வாறான சமூக அமைப்புகள் உதவும் என்பதைபற்றி சிந்திக்க வேண்டி யுள்ளது.

**உணவு இறைமையும் கூட்டுறவும்**

1990ம் ஆண்டுகளில் சர்வதேச விவசாய அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமைவாக உணவு இறைமை எனும் கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது. உணவு இறமை என்பது உற்பத்தி, வினியோகம் மற்றும் கொள்வனவு ஆகியன மக்களுடைய உரிமை மற்றும் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டது என்கின்ற எண்ணக்கருவாகும். எவ்வாறு ஒரு நாட்டின் இறைமை மக்களுடைய உரிமைகளில் தங்கியிருக்கிறதோ அதே போல் உணவு இறைமையும் மக்களுடைய ஜனநாயக செயற்பாட்டுடன் தொடர்புபட்டது. அதாவது உணவு இறைமை என்பது தேசியமட்டத்தில் அரசாங்கத்திடம் இருந்து தீர்வுகளை எதிர்பார்க்காமல் உள்ளூரிலேயே உணவை உற்பத்தி மற்றும் வினியோகத்தை பொறுப்பெடுக்கும் செயற்பாடாகும். இவ்வாறான உணவு இறமை செயற்பாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு பெரும் பங்கு இருக்கிறது.



உலக வங்கியின் ஆலோசனைப்படி 1953ஆம் ஆண்டு அரிசியை மானிய அடிப்படையில் கொடுக்கமுடியாது என அரசு அறிவித்தது. அத்துடன் ஒரு கொத்து அரிசி 25 சதத்திலிருந்து 70 சதமாக விலை உயர்ந்தது. இதற்கு மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு வந்தது. 1953ம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் பெரும் ஹர்த்தால் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு பிறகு வந்த 25 வருடங்களில் அரிசியில் 90 வீத தன்னிறைவை அடைந்த நிலைக்கு மாறியிருந்தது.

அந்தவகையில் கூட்டுறவுச்சங்கங்கள் சரியாக இயங்குமானால் நெருக்கடி யாலும் சந்தையாலும் வழங்கலில் மற்றும் கேள்வியில் ஏற்படும் பிரச்சினையை உள்ளூார் மட்டத்தில் ஓரளவு நிவர்த்தி செய்யமுடியும். உதாரணமாக கூட்டுறவுத்துறை அறுவடைக்காலத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கவேண்டும். இது விவசாயிகளுக்கு நெல்லுக்கான சரியான விலை கிடைப்பதற்கு உதவும். மேலும் அந்த நெல்லை அரிசியாகவோ மாவாகவோ உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு மக்களுக்கு வினியோகிக்கவும் வேண்டும்.

வடமாகாணத்தை எடுத்துபார்த்தால் 18 கூட்டுறவு அரிசிஅலைகள் இருக்கிறது. ஆனால் அவை 8 வீதம் பயன்பாட்டில்தான் உள்ளன. ஆனால் வடக்கில் உள்ள ஏனைய கூட்டுறவு சங்கங்கங்களும் நெல்லை கொள்வனவுசெய்து அரிசியாக்கி வடமாகாணத்தில் உள்ள 450 கூட்டுறவுச்சங்க கிழைகள் ஊடாக விநியோகிக்குமாயின் அது உணவு இறமை சார்ந்த ஒரு முறையாக மாறும்.

**வளங்களின் பயன்பாடு**

யுத்தத்திற்கு பிறகு பல தொண்டு நிறுவனங்கள் வந்து கூட்டுறவுத்துறைக்கு பெரும் அரிசி ஆலைகளை கட்டிக் கொடுத்துள்ளார்கள். இவை நவீனமயப்படுத்தப்பட்ட பெரும் அரிசி ஆலைகள். உள்ர் உற்பத்திக்கு பொருத்த மற்றவையாகவும் உள்ளது. யுத்தத்திற்கு முன்பு கூட்டுறவுகள் சிறு அரிசி ஆலைகளைத்தான் இயக்கி வந்தார்கள். தற்போது உள்ள பெரிய ஆலைகளை இயக்குவதற்கான நடைமுறைமூலதனம் கூட்டுறவுகளிடமில்லை. அவற்றை இயக்குவதற்கான மின்சாரசெலவுகளும் மிகவும் அதிகமானதாக இருக்கிறது.

இதே போன்று அமெரிக்காவின் ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவில் பெரிய அரிசி ஆலைகளை உருவாக்கினால் வினைத்திறனான பல வேலைகளை முன்னெடுக்கலாம் என்று ஆலோசனை கூறி மேற்கத்தைய நாடுகளில் இருந்து பெரிய இயந்திரங்களை இறக்குமதி செய்வதை தூண்டி சிறிய நெல் குற்றும் ஆலைகளை மூடச்செய்தனர். அவர்களின் ஆலோசனைகள் தோல்வியில் முடிந்ததாகவே தென்னாசியாவின் முக்கியமான ஆய்வாளர்களில் ஒருவரான பார்பரா ஹறிஸ் - வைற் (Barbara harriss- White) 1982ம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

இந்த நிலமை தற்போதுகூட வடக்கின் கூட்டுறவுத் துறைக்குள் இருக்கிறது. குறிப்பாக பண்டத்தரிப்பு, கொடிகாமம், உடுப்பிட்டி சங்கங்களில் ஆரம்ப காலங்களில் இருந்து இன்றுவரை சிறிய நெல் ஆலைகளாக தொடர்ச்சியாக இயங்கி வருகின்றன. ஆனால் வன்னியில் மீள்கட்டுமானத்துடன் உருவாக்கப்பட்ட பெரும் அரிசி ஆலைகள் இயங்காமல் உள்ளன. அதாவது யுத்தத்திற்கு பின்பு 25 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நிதி இவ்வாறான அரிசி ஆலைகளில் தொண்டு நிறுவனங்களால் முதலீடு செய்யப்பட்டது. அந்த ஆலைகள் இயங்குவதற்கான நடைமுறை மூலதனம் இல்லாததால் அது நிலையான திட்டமாக இருக்கவில்லை.

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் ஆய்வின்படி வடமாகாணத்தில் ஆண்டுக்கு 134,000 மெற்றிக் தொன் நெல் நுகர்ச்சி செய்யப்படுகின்றது. கூட்டுறவுத்துறையிடம் 100 கோடி ரூபா நிதி இருக்குமாயின் அனைத்து கூட்டுறவு அரிசி ஆலைகளையும் முழுமையாக செயற்படுத்தி வடமாகாணத்தின் அரிசி தேவையில் 10 வீதமான நுகர்வுக்கான உற்பத்தி செய்து அரிசியின் விலையை தீர்மானிக்ககூடிய ஒரு சக்தியாக மாறலாம்.

கூட்டுறவுகள் இவ்வாறான பெரும் நடைமுறை மூலதனத்தேவையை அரசாங்கத்திடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெறும் முயற்சிகளை செய்யும் அதே நேரம் இயன்ற அளவுக்கு கூட்டுறவு துறையிடம் இருக்கும் சொத்துக்களை பயன்படுத்தி உடனடியாக நெல் கொள்வனவினை ஆரம்பிக்க வேண்டும். இது வர்த்தகர்களின் பதுக்கலால் ஏற்படும் விலை உயர்வுகளுக்கு ஓரளவாவது முகம் கொடுக்க கூடியதான சூழலை உருவாக்கும். தற்போதைய உணவு நெருக்கடி மத்தியில் மக்களின் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு கைகொடுப்பதென்பது ஒரு சமூக அமைப்பு என்ற வகையில் கூட்டுறவின் மிக முக்கிய பொறுப்பாக அமையும்.







**கலாநிதி அகிலன் கதிர்காமர்,**
**கா. சுகன்ஜா**

# இந்திய-சீன பதற்றம்: அருணாச்சல பிரதேச எல்லை பகுதி கிராமங்களில் கள நிலவரம் என்ன?

ஷகீல் அக்தர்

இந்தியாவின் வடகிழக்கே உள்ள கடைசி மாநிலம் அருணாசல பிரதேசம். அந்த மாநிலத்தின் சுமார் ஆயிரம் கிலோ மீற்றர் எல்லை சீனாவின் எல்லையையொட்டி இருக்கிறது. இதை தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் சீனா அருணாசல பிரதேசத்தின் பெரும்பாலான எல்லைப் பகுதிகளுக்கு உரிமை கொண்டாடி, அதை "தென் திபெத்" என்று அழைக்கிறது.

அருணாச்சல பிரதேச எல்லை தகராறு இருந்தாலும் அதன் அழகான மலைகள், ஆறுகள், காடுகள் என அமைதியான மாநிலமாக இருந்து வந்தாலும், சில காலமாக அங்கு நிலைமை மாறி, எல்லைப் பகுதிகளில் பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு, லடாக்கில் இந்தியா-சீனா இடையே நடந்த மோதலின் தாக்கம், 17 லட்சம் மக்கள்தொகை கொண்ட அருணாசல பிரதேசத்திலும் உணரப்பட்டது. ஆனால், அங்குள்ள நிலைமை தொடர்பான செய்திகள் மிகக் குறைவாகவே வெளிவரும். அத்தகைய எல்லை கிராமங்களில் உள்ள கள நிலவரத்தை இங்கே காணலாம்.

அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒரு மாநிலம், ஆனால் நீங்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று வருவது போல நேரடியாக இங்கு நுழைய முடியாது. அருணாசல பிரதேசம் செல்வதற்கு முன் உள்நுழைவு அனுமதி தேவை. இன்னர் லைன் பெர்மிட் என்பது அருணாசலத்தில் வெளியில் இருந்து வருபவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு அனுமதி ஆவணமாகும்.

இந்த அனுமதியை நாம் பெற்றுக் கொண்டு நேராக அருணாசல பிரதேசம் சென்றோம். இந்த மாநிலத்தின் மக்கள் தொகை அதிகம் இல்லை, எனவே இங்குள்ள கிராமங்களும் சிறியவையாக இருப்பதை அறிந்தோம். ஆனால், அவை ஒன்றுக்கு ஒன்று பல கி.மீ தூர இடைவெளியைக் கொண்டிருந்தன.

சீனாவின் எல்லைக்கு அருகில் உள்ள கிராமத்திற்கு செல்ல வேண்டுமானால் எளிதில் சாலை வழியாக பயணம் செய்ய முடியாத பாதை வழியாக செல்ல வேண்டும். அப்படிப்பட்ட கிராமத்தை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருந்தோம்.

ஹெளலியாங் நகரம்... நாம் சென்ற பாதையில் குறுக்கே தென்பட்ட இடம். இந்த நகரம் அஞ்சாவ் மாவட்டத்தின் தலைமையகமாகும். சீன எல்லையில் இருந்து சற்று தொலைவில் அமைந்துள்ள இந்த நகரத்தில் இந்திய ராணுவத்தின் ஒரு பெரிய இராணுவ பகுதி உள்ளது.

பயணத்தின் இரண்டாவது நிறுத்தத்தில், சீனாவின் எல்லைக்கு அருகில் உள்ள வாலாங் நகரத்தை அடைந்தோம். இங்கே நாங்கள் இரவு தங்க வேண்டியிருந்தது. எல்லைப் பகுதியின் காஹூ மற்றும் கிப்து கிராமங்கள், இங்கிருந்து சில மைல்கள் தொலைவில் உள்ளன. இந்தப் பகுதி முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குள்ள போர் நினைவுச் சின்னம் வாலாங்கைச் சிறப்புறச் செய்கிறது.

உண்மையில், 1962இல், சீனா இங்கு ஒரு பெரிய பகுதியை ஆக்கிரமித்தது. போரில், சீன வீரர்களிடமிருந்து இந்தப் பகுதியைப் பாதுகாக்கும் போது ஆயிரக் கணக்கான இந்திய வீரர்கள் தங்கள் உயிர்களை இழந்தனர், அவர்களின் நினைவாக இங்கு போர் நினைவுச்சின்னம் கட்டப்பட்டுள்ளது.

வாலாங்கில் இரவைக் கழித்துவிட்டு, மறுநாள் காலை அருணாசல பிரதேசத்தின் கடைசி எல்லை கிராமமான கஹூவை அடைந்தோம். அசல் எல்லை கட்டுப்பாட்டுக் கோடு (எல்ஏசி) அருகிலுள்ள இந்த கிராமத்திலிருந்து பார்த்தால், மறுபுறம் சீனாவின் எல்லை கிராமம் தெரியும். உயரமான சிகரங்கள் தென்படுகின்றன. அவற்றுக்கு இடையே தான் எல்ஏசி உள்ளது.

பெருமளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பதை இந்த கிராமத்தில் தெளிவாகக் காணமுடிகிறது. மறுபுறம், சீனாவின் கிராமத்தில் இருந்து சிறிது தூரத்தில் அந்நாட்டு இராணுவத்தினர் இருப்பது தெரிகிறது.

தற்போது, கஹூ கிராமத்தில் இராணுவ கட்டுப்பாடுகள் பெரிய அளவில் உள்ளன, ஆனால் இந்த இடம் எப்போதும் இப்படி இருந்ததில்லை. எட்டு முதல் 10 வீடுகள் கொண்ட கஹூ கிராமம் அமைதியான பகுதியாக இருந்து வருகிறது,

ஆனால் லடாக்கில் இந்தியா மற்றும் சீன வீரர்களுக்கு இடையேயான மோதல் நடந்தது முதல் இராணுவத்தினரின் இருப்பு இங்கு அதிகமாகக் காணப்படுகிறது. சீன இராணுவ வீரர்கள் இந்திய எல்லைக்குள் எப்படி வருகிறார்கள் என்று கிராமத்தைச் சேர்ந்த சிலர் தெரிவித்தனர்.

இந்த பகுதி முழுவதும் இந்திய இராணுவத்தின் கண்காணிப்பில் உள்ளது. இராணுவ நடவடிக்கைகள் அதிகமாக இருப்பதால், இங்கு வாழும் சிலர் மாறிவிட்ட தங்கள் பகுதி சூழ்நிலைகளை வெளிப்படையாகப் பேசுவதைத் தவிர்க்கிறார்கள். இந்த எல்லை கிராமத்தில் பதற்றம் நிறைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.

சீனாவின் செயல்பாட்டுக்கு எதிர் வினையாற்றும் வகையில் இந்திய அரசு காஹூ கிராமத்தை சுற்றுலா தலமாக மாற்ற முயற்சி எடுத்து வருகிறது. இங்கு தற்போது சுற்றுலா பயணிகள் தங்குவதற்காக தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

அரசாங்கமும் இங்கு பெரிய சுற்றுலா விடுதியை கட்டி வருகிறது. விடுதிக்கு அருகில் புதிய இராணுவப் பாலமும் கட்டப்பட்டுள்ளது. ஆனால், இந்த பாலத்தின் மேல் பொதுமக்கள் செல்ல முடியாது.

சீன இராணுவம் எல்ஏசி முழுவதும் அதன் கண்காணிப்பு கோபுரங்களையும் இராணுவ தளங்களையும் பெரிய அளவில் கட்டியிருப்பதாக தகவல் உள்ளது.

அருணாசலப் பிரதேசத்திற்கு நாம் சென்று இந்த செய்தியை வெளியிடும் பணியில் இருந்தபோது, மாநிலத்தின் சில பகுதிகளில் சீனா சில கிராமங்களையும் அதன் இராணுவ தளங்களையும் கட்டியிருப்பதாக ஒரு தொலைக்காட்சி சேனல் செய்தி வெளியிட்டது.

இந்திய எல்லையில் இருந்து பல கிலோமீட்டர்களுக்குள் சீனா ஒரு கிராமத்தை கட்டியுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

எல்லையில் சீனாவின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, தவாங், அஞ்சாவ், மெச்சுகா போன்ற பகுதிகளில் இந்தியா கூடுதல் படைகளையும் கனரக ஆயுதங்களையும் நிலைநிறுத்தியுள்ளதாக உள்ளூர்வாசிகள் எங்களிடம் தெரிவித்தனர்.

பாசி காட் எம்.எல்.ஏ நானாங் எரிங் கூறுகையில், "போஃபர்ஸ் துப்பாக்கிகள், ஹோவிட்சர் துப்பாக்கிகள் போல, பல கனரக ஆயுதங்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன, முன்பு இரு தரப்புக்கும் இடையே நல்ல உறவு இருந்தது, ஆனால் டோக்லாம் பதற்றத்தால் லடாக்கில் சிக்கல் ஏற்பட்டது. அதன் பிறகு சீனாவின் அணுகுமுறை மாறியது. படிப்படியாக அவர்கள் இடங்களை கைப்பற்றுகின்றனர்," என்றார்.

தேசுவிலிருந்து காஹூ மற்றும் கிபேடு வரையிலான பயணத்தின் போது, எல்லா இடங்களிலும் சாலைகள் விரிவுபடுத்தப்படுவதைக் கண்டோம்.

கனரக இராணுவ உபகரணங்கள், டிரக்குகள் மற்றும் வீரர்களின் வேகமான செயல்பாடுகளை பார்க்கும்போது, அந்த மலைகள் வழியாக ஒரு புதிய சாலை போடப்படுவதை உணர்ந்தோம்.

இந்த பாதையில் ஏற்கெனவே உள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருகின்றன. பழைய பாலங்களுக்குப் பதிலாக டஜன் கணக்கான புதிய பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதை அப்பகுதி மக்களும் உறுதிப்படுத்துகின்றனர்.

பழைய பாலத்திற்குப் பதிலாக கட்டப்பட்ட புதிய பாலத்தைக் காட்டி, வல்லாங் பகுதியைச் சேர்ந்த லக்கிம் சோபெலாய், "இந்தப் புதிய பாலம் கட்டப்படுவதால், இந்தியாவின் தரப்பில் இருந்து வளர்ச்சி நடப்பதை இன்று என்னால் பார்க்க முடிகிறது. கட்டுமானம் நடக்கிறது," என்கிறார்.

கடந்த மூன்று மாதங்களாக இங்குள்ள மலைகளில் இந்திய இராணுவம் ஏவுகணைகள், எம்777, ஹோவிட்சர் துப்பாக்கிகள், விமான எதிர்ப்பு கருவிகள், துப்பாக்கிகளை பெரிய அளவில் எடுத்துச் செல்வதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. இருப்பினும், இதை உறுதிப்படுத்த முடியவில்லை.

ஆனால் அஞ்சாவ், டெபாங் பள்ளத்தாக்கு, சியோமி, அப்பர் சுபன்சிரி மற்றும் தவாங் மாவட்டங்களில் விமான ஓடுதளங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. புதிய ஹெலிகாப்டர்கள், ட்ரோன்கள், மல்டி-பேரல் துப்பாக்கிகள் மற்றும் ராக்கெட் லாஞ்சர்கள் எல்ஏசிக்கு அருகில் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிந்தோம்.

கடந்த ஆண்டு அக்டோபரில் புதிய எல்லை சட்டத்தை (புதிய எல்லை நிலச் சட்டம்) சீனா நிறைவேற்றியது. இந்த சட்டம் கடந்த ஜனவரி 1ஆம் திகதி முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ், சீனாவுடன் எந்த எல்லையில் தகராறு உள்ளதோ, அந்த நிலம் சீனாவின் அதிகார வரம்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லைப் பகுதிகளில் "கட்டுமானப் பணிகளை" மேம்படுத்துவது, கட்டுமானத்திற்கான துணை திறனை வலுப்படுத்துவது போன்றவையும் புதிய சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் அமலுக்கு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அருணாசலப் பிரதேசத்தின் 15 குடியிருப்புப் பகுதிகள், மலைகள் மற்றும் ஆறுகளுக்கு சீனா தமது மொழியில் பெயர் சூட்டியது.

சீனாவின் இந்த நடவடிக்கையை இந்தியா கண்டித்து அந்த பெயர்களை நிராகரிப்பதாக அறிவித்தது. பெயரை மாற்றுவதால் கள யதார்த்தம் மாறாது என்கிறது இந்தியா.

ஆனால் உண்மையில் தமது எல்லையில் சீனாவின் ஆக்கிரமிப்பு அணுகுமுறை இந்தியாவின் கவலையை அதிகரிக்கவே செய்துள்ளது. அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள அசாதாரணமான ராணுவ தயார்நிலை குறித்து பதில் பெற இந்திய இராணுவத்தின் செய்தித் தொடர்பாளருக்கு மின்னஞ்சல்மூலம் கடிதம் அனுப்பினோம். இதுவரை பதில் வரவில்லை. ■

- பி.பி.சி.



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

08. **பின்வரும் தொடர் மொழிக்கான ஒரு மொழியை எழுதுக.**

i) ஒன்றைப் போலிருக்கும் மற்றொன்று : ..........................................

ii) பத்தாண்டுகளைக் குறிக்கும் சொல் : ..........................................

09. **பின்வரும் விடுகதைகளுக்கான விடைகளைத் தருக.**

i) கத்தியின்றி இலைகளை வெட்டும். அது என்ன?

..........................................

ii) மெல்லியதாய் இருக்கும், தண்ணீரில் மிதக்கும் ஆயிரம் பேர் சேர்ந்தாலும் அதனைத் தூக்க முடியாது, அது என்ன?

..........................................

10. **பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவாக்கத்தை எழுதுக.**

i) இ.பெ.கூ: ..........................................

ii) இ.மி.ச. : ..........................................

11. **பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

i)  ..............................

ii)  ..............................

12. **பின்வரும் ஆங்கில வாக்கியங்களுக்கான தமிழ்க்கருத்தை எழுதுக.**

i) National dress : ..........................................

ii) Fisherman : ..........................................

13. **கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

i) you / ready? / Are : ..........................................


ii) the / canteen / to / am / I / going : ..........................................

14. **'சிக்குராதா' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

..........................................

15. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**

i) உங்களுக்கு மாம்பழம் வேண்டுமா? : ..........................................


16. 


வட்டத்தில் காணப்படும் எண்கள் அனைத்தையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச் சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசத்தை எண் பெயரில் தருக.

..........................................

17. 28 - 13 ஐக் கழிக்கும்போது கிடைக்கும் விடையினை உரோம எண்ணில் எழுதுக.


..........................................

18. 

இத்திண்ம உருவில் காணப்படும்,

i) விளிம்புகள் எத்தனை? ..........................................

ii) தள வடிவங்கள் எவை? ..........................................

19. 

i) நிழற்றப்பட்ட பகுதியினைத் தசம எண்ணில் தருக.

..........................................

ii) நிழற்றப்படாத பகுதியினைப் பின்னத்தில் தருக.

..........................................

## விடைகள்

08. 1) போலி
2) தசாப்தம்

09. 1) வெட்டுக்கிளி
2) நீர்க்குமிழி

10. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின்சாரசபை

11. 1) Elephant
2) Flowers

12. 1) தேசிய உடை
2) மீனவர் / மீனவன்

13. 1) Are you ready?
2) I am going to the canteen

14. வெள்ளிக்கிழமை / வெள்ளி

15. ஒயாட்ட அம்ப ஓனத?

16. ஐயாயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்று.
ஐந்தாயிரத்து அறுநூற்று அறுபத்தொன்று.

17. 1) XV

18. i) 12
ii) சதுரம், செவ்வகம்

19. i) 0.2
ii) $\frac{8}{10}$ , $\frac{4}{5}$

---

கல்வி tv CHANNEL-1

**26.01.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**26.01.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# மத்திய வங்கியின் நிதிசார் நிபுணத்துவ விழிப்பூட்டல்!

காத்தான்குடி, ஜன. 26

இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் நிபுணத்துவம் தொடர்பாக பிரதேச செயலக ரீதியாக மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக, மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் நிபுணத்துவம் தொடர்பாக விழிப்பூட்டும் செயலமர்வு, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதய சிறீதர் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில், இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் கே. பிரபாகரன், திருகோணமலை முகாமையாளர் எம். நிரோசன் ஆகியோர் கலந்துகொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் நிபுணத்துவம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய நிலவரம் தொடர்பாக விளக்கமளித்தனர். (ஐ)




# 105 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்!

மண்முனை, ஜன. 26

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கூழாவடி, நாவல்குடா, விவேகானந்தபுரம் பிரதேசங்களில் வாழும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய - தெரிவு செய்யப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த 105 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் சிடாஸ் கனடா அமைப்பின் அனுசரணையுடன் சிடாஸ் மட்டக்களப்பு கல்வி மாவட்டக் கிளையால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட். மஞ்சத்தொடுவாய் சாரதா வித்தியாலய அதிபர் திருமதி ஜெயமலர் டிகநாதன் மற்றும் விவேகானந்தா சமூக அபிவிருத்திச் சபை பொருளாளர் மு. செல்வராஜா ஆகியோர் பங்கேற்றனர். அத்துடன், குறித்த மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

மேலும் சிடாஸ் மட்டக்களப்பு கல்வி மாவட்டக் கிளையின் செயலாளரும் ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான அ. சுகுமாரன் கிளையின் பொருளாளரும் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகருமான ஜோ.சகாயநாதன் அவர்களும் கிளையின் உபதலைவரும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஞா.சிறிதரன் மற்றும் கிளையின் உதவிச் செயலாளரும் ஓய்வுநிலை வங்கி முகாமையாளருமான எஸ்.வீ.சுவேந்திரன் கலந்துகொண்டிருந்தனர். மேலும் இவர்களுடன் சிடாஸ் அமைப்பின் இணைப்பாளர் எம்.புவிராஜாவும் கலந்துகொண்டிருந்தார். (ஐ)

# சம்பூரில் சூரிய சக்தி மின் நிலையம்! இந்தியாவுடன் ஒப்பந்தத்துக்கு திட்டம்

புதுடில்லி, ஜன. 26

**சம்பூரில் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு இந்தியாவின் அரச நிறுவனமான என். ரி. பி. சி. எனப்படும் நஷனல் தெர்மல் பவர் கோப்ரேஷன் லிமிற்றெட் (National Thermal Power Corporation Limited) நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.**

என். ரி. பி. சி. நிறுவனம் இந்தியாவில் 60 ஆயிரம் மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். இலங்கையின் மொத்த மின் உற்பத்தி 4,300 மெகாவாட்ஸை விட அதிகரிக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மன்னாரில் 5,000 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய



காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பது தொடர்பிலும் இரு தரப்பினரும் ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மின்சாரத்தை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்குள்ள இயலுமை தொடர்பிலும் சுட்டிக்காட்டியுள்ள இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர், இரு நாடுகளுக்கும் இடையிலான மின் சக்தி கட்டமைப் பொன்றை ஏற்படுத்துவது பெரிய விடயமாக அமையாது எனவும் கூறியுள்ளார். (ஐ)

## வீட்டின் கூரை பிரித்து நுழைந்து 21 பவுண் நகை, பணம் திருட்டு!

மட்டக்களப்பு, ஜன. 26

மட்டக்களப்பு கல்லடி டச்பார் வீதியில் பூட்டியிருந்த வீட்டின் கூரையை பிரித்து உள்ளிறங்கி 21 பவுண் தங்க ஆபரணங்கள் 70 ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவை திருடப்பட்டன என்று காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் மகனின் பட்டமளிப்பு விழாவுக்காக கடந்த 21ஆம் திகதி வீட்டை பூட்டிவிட்டு குடும்பத்துடன் கண்டிக்கு சென்றுவிட்டு ஞாயிறுக்கிழமை வீட்டுக்கு திரும்பியிருந்தனர். இதன்போதே, வீட்டின் கூரை பிரிக்கப்பட்டு உள்நுழைந்த திருடர்கள் நகைகள், பணத்தை திருடிச் சென்றமை தெரிய வந்தது.

காத்தான்குடி பொலிஸார் மோப்ப நாய்கள், மற்றும் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# எக்னெலிகொடவுக்கு நீதி கோரி சந்தியா தலைமுடி காணிக்கை!

கொழும்பு, ஜன 26

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டு 12 வருடங்களாகின்ற நிலையில், அவருக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தனது தலைமுடியை காணிக்கையாக செலுத்தியுள்ளார்.

கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள காளி கோவிலில், நேற்று காலை விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட அவர் அதன்பின்பு தனது தலைமுடியை காணிக்கையாக செலுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி காணாமலாக்கப்பட்டார்.

அவருக்கு என்ன நடந்தது



என்பதை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து தொடர்ச்சியாகப் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கே)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் நிலையத்தை மீளவும் திறப்பதில் தாமதம் ஏற்படலாம்

கொழும்பு, ஜன. 26

எரிபொருள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் பணி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தாமதமடையலாம் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. சப்புகஸ்கந்த எரி பொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகளை எதிர் வரும் 26 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டிருந்தது. (அ)

# ஓபியம் போதைப்பொருளுடன் வாழைச்சேனையில் ஒருவர் கைது!

வாழைச்சேனை, ஜன. 26

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓபியம் போதைப் பொருட்களுடன் கல்குடாவைச் சேர்ந்த 72 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து சுமார் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான 460 கிராம் ஓபியம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதனை கடத்திச்செல்லப் பயன்படுத்திய முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய களுவாஞ்சிக்குடி விஷேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த போதை வியா பாரி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புர்கினா பாசோ நாட்டின் ஜனாதிபதி சிறைப்பிடிப்பு

## அதிகாரத்தை கைப்பற்றியது இராணுவம்

ஒகடோகு, ஜன. 26

**புர்கினா பாசோ நாட்டின் ஜனாதிபதி ரோச் கபோரை பதவி நீக்கம் செய்து, ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியதாக அந்த நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.**

அரசமைப்பை இடைநிறுத்தியதாகவும், அரசாங்கத்தையும் தேசிய சட்டமன்றத்தையும் கலைத்ததாகவும், நாட்டின் எல்லைகளை மூடிவிட்டதாகவும் இராணுவம் அறிவித்துள்ளது.

கடந்த திங்களன்று லெப்டினன்ட் கேணல் பால்-ஹென்றி சண்டோகோ டமிபா கையெழுத்திட்டு அரச தொலைக்காட்சியில் விடுக்கப்பட்ட அறிவிப்பில், கைய கப்படுத்தல் வன்முறையின்றி மேற்கொள்ளப்பட்டதாகவும், தடுத்து வைக்கப்பட்டவர்கள் பாதுகாப்பான இடத்தில் இருப்பதாகவும் கூறப்பட்டது.

முன்னர் கேள்விப்படாத ஒரு நிறுவனமான பேட்ரியாட்டிக் இயக்கம் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு அல்லது எம்.பி.எஸ்.ஆர். என்ற பெயரில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

"இராணுவத்தின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய எம்.பி.எஸ்.ஆர்., ஜனாதிபதி கபோரின் பதவியை நேற்றுடன் நிறுத்த முடிவு செய்துள்ளது" என்று அது கூறியது.

பாதுகாப்பு நிலைமை மோசமடைந்தமை மற்றும் தேசத்தை ஒன்றிணைக்க கபோரின் இயலாமை மற்றும் நாடு எதிர்கொள்ளும் சவால்களுக்கு திறம்பட பதிலளிக்கவேண்டியுள்ளதால் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

எம்.பி.எஸ்.ஆர் நியாயமான நேரத்துக்குள் அரசமைப்பு ஒழுங்கை மீண்டும் நிறுவும் என்றும், நாடு முழுவதும் இரவு ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்படும் என்றும் அந்த அறிக்கை கூறியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவ முகாம்களில் கடுமையான துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்டு, தலைநகரில் இரண்டு நாட்கள் குழப்பம் மற்றும் அச்சத்துக்குப் பிறகு இராணுவம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஆயுதக் குழுக்களுக்கு எதிரான தமது போராட்டத்துக்கு அதிக ஆதரவை இராணுவம் கோரியுள்ளது.

ஜனாதிபதி ரோச் மார்க் கிறிஸ்டியன் கபோர் எங்கே



இருக்கிறார் என்பது உடனடியாகத் தெரியவில்லை.

முன்னதாக கபோரின் நிலைமையைப் பற்றி முரண்பட்ட தகவல்கள் வெளியாகியிருந்தன. சிலர் அவர் ஆட்சிக் கவிழ்ப்பாளர்களால் தடுத்து வைக்கப்பட்டதாகக் கூறினர். அவருக்கு விசுவாசமான படைகள் அவரை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்றதாக இன்னொரு தகவல் கூறியது.

முன்னதாக, கபோரின் கட்சி அவர் ஒரு படுகொலை முயற்சியில் இருந்து தப்பியதாகக் கூறியது. ஆனால் எந்த விவரங்களையும் தெரிவிக்கவில்லை. முன்னதாக திங்களன்று கபோரின் இல்லத்துக்கு அருகில் கவச வாகனங்கள் காணப்பட்டன.

கபோரின் இருப்பிடம் பற்றிய முரண்பாடான அறிக்கைகளைத் தொடர்ந்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல் ஒரு அறிக்கையில், "ஜனாதிபதி கபோர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதை இப்போது நாங்கள் அறிவோம்." என தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அன்டோனியோ குட்டெரெஸ் ஒரு அறிக்கையில், "ஆயுத பலத்தால் அரசாங்கத்தை கைப்பற்றும் முயற்சியை வன்மையாகக் கண்டிக்கிறேன்" நிகழ்வுகளை "சதிப்புரட்சி" என்று அழைத்தார்.



## ஜேர்மனி பல்கலைக்குள் புகுந்து துப்பாக்கிச்சூடு!

### ஒருவர் உயிரிழப்பு;மூவர் காயம்!

பேர்லின், ஜன. 26

தென்மேற்கு ஜேர்மனியில் உள்ள ஹைடெல்பேர்க் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், ஒருவர் உயிரிழந்ததோடு மூவர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், துப்பாக்கிதாரியும் தன்னைத் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டார் என மன்ஹெய்ம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை பல்கலைக்கழகத்தில் விரிவுரை மண்டபத்துக்குள் நுழைந்த துப்பாக்கிதாரி, அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதன்போது படுகாயங்களுக்குள்ளான பெண், சில மணி நேரங்களிலேயே இறந்துவிட்டதாக பேடன்-வூர்ட்டம்பெர்க் மாநில உட்துறை அமைச்சர் தாமஸ் ஸ்ட்ரோப்ல் தெரிவித்தார்.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர் 18 வயதான ஜேர்மன் உயிரியல் மாணவர், அவர் நாட்டில் இதற்கு முன்பு எந்த குற்றப் பதிவும் இல்லாதவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கி ஏந்திய நபர் துப்பாக்கிச் சூடு நடப்பதற்கு சற்று முன்பு வட்ஸ்-அப் குறுஞ்செய்தியை அனுப்பியதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதில், 'மக்கள் இப்போது தண்டிக்கப்படவேண்டும்' என்றும் அவர்களை கடலில் புதைக்கப்பட விரும்புவதாகவும் மன்ஹெய்ம் பொலிஸ்துறைத் தலைவர் சீக்பிரைட் கோல்மர் ஊடக சந்திப்பில் தெரிவித்தார். (அ)

## அமெரிக்க போர் விமானம் தென்சீனக் கடலில் விபத்து

### ஏழு பேர் காயம்

நியூயோர்க், ஜன. 26

தென் சீனக் கடற்பகுதியில் அமெரிக்க போர் விமானமொன்று விபத்துக்குள்ளானதில், ஏழு அமெரிக்க இராணுவ வீரர்கள் காயமடைந்தனர் மற்றும் விமானி பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார் என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன் என்ற விமானம் தாங்கிக் கப்பலின் மேல்தளத்தில் எப்-35சி போர் விமானம் தரையிறங்கியபோது இந்த விபத்து சம்பவித்துள்ளது. தென் சீனக் கடலில் வழக்கமான விமான நடவடிக்கைகளின்போது இந்த சம்பவம் நடந்ததாக கடற்படை அறிக்கை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'விமானத்தில் இருந்து விமானி பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார் மற்றும் அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டார். விமானி நிலையான நிலையில் உள்ளார். மொத்தம் ஏழு மாலுமிகள் காயமடைந்துள்ளனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசிபிக் கடல் பகுதியில் சீன ஆக்ரமிப்பை தடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்க கடற்படை ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)





## அனைத்து பாடசாலைகளிலும் மாணவிகளுக்கு அனுமதி!

### தாலிபான்களின் அறிவிப்பு

காபூல், ஜன. 26

ஆப்கானிஸ்தானில் எதிர்வரும் மார்ச் 21 முதல் அனைத்து மாணவிகளும் பாடசாலைகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியது முதல் பெண்களுக்கு எதிரான பல்வேறு சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

அதன்படி பெண்கள் வேலைக்கு செல்லக்கூடாது, வெளியே தனியாக நடமாடக்கூடாது போன்ற சட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதே போன்று தனியார், அரசு அலுவலகங்களில் பெண்கள் வேலை செய்ய அனுமதிக்கப்படவில்லை.

பாடசாலைகள், கல்லூரிகள், மதரசாக்களில் மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் மாணவிகள் மற்றும் ஆசிரியைகளுக்கு தடை விதிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆப்கான் பெண்கள் தலிபான்களுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதிக்கு பின்னர் மீண்டும் அனைத்து பாடசாலைகளிலும் மாணவிகள் அனுமதிக்கப்படுவார்கள் என தலிபான்கள் தலைமையிலான அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ)

## ஹெய்ட்டியை அடுத்தடுத்து தாக்கிய 2 நிலநடுக்கங்கள்

### 200 வீடுகள் தரைமட்டம்: 2 பேர் உயிரிழப்பு

போர்ட் ஓ பிரின்ஸ், ஜன. 26

ஹைதியில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நில நிலநடுக்கங்களில் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன.

தலைநகர் போர்ட் ஓ பிரின்சின் மேற்கு பகுதி மற்றும் நிப்பஸ் மாவட்டத்தில் நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

ரிச்டர் அளவுகோலில் அதிகபட்சமாக 5.3 ஆக பதிவான இந்த நில நடுக்கத்தால், பெண் உட்பட 2 பேர் உயிரிழந்துள்ளனர் என நில அதிர்வு ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஏறத்தாழ 200 வீடுகள் இடிந்து தரைமட்டமானதாகவும், 600 கட்டடங்கள் சேதமானதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

மேலும் இடிபாடுகளில் சிக்கி படுகாயமடைந்த 50 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ச்சியாக மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)



# ஷா அப்ரிடி, ஸ்மிருதி மந்தனா அதிசிறந்த வீரர்களாக தெரிவு

டுபாய், ஜன. 26

சர்வதேச கிரிக்கெட்டின் 2021 ஆம் ஆண்டின் அதிசிறந்த வீரராக பாகிஸ்தானின் ஷஹீன் ஷா அப்ரிடியும் அதிசிறந்த வீராங்கனையாக இந்தியாவின் ஸ்மிருதி மந்தனாவும் தெரிவாகியுள்ளனர்.

கடந்த வருடம் 36 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய ஷஹீன் ஷா அப்ரிடி மொத்தமாக 78 விக்கெட்களை வீழ்த்தி, வருடத்தின் அதிசிறந்த வீரருக்கான சேர் கார்பீல்ட் சோபர்ஸ் விருதை வென்றெடுத்தார்.

2021ஆம் ஆண்டில் மூவகை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் மிகத் திறமையாக பந்துவீசிய ஷஹீன் ஷா அப்ரிடி, பல்வேறு நாடுகளின் அதிசிறந்த துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்திருந்தார். குறிப்பாக டெஸ்ட் மற்றும் இருபது - 20 போட்டிகளில் மிகச் சிறப்பாக பந்துவீசியிருந்தார்.




ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் நடைபெற்ற சர்வதேச இருபது - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் இறுதிப் போட்டிவரை முன்னேற பெரும் பங்காற்றியிருந்தார்.

அதிசிறந்த வீராங்கனையாக இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா ரஷேல் ஹேஹோ ப்ளின்ட் விருதை வென்றெடுத்தார்.

கடந்த வருடம் 22 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய இவர், மொத்தமாக 855 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அவரின் சராசரி 38.86 ஆகும். 2021 இல் இந்திய கிரிக்கெட் சிரமங்களை எதிர்கொண்டபோதிலும் ஸ்மிருதி மந்தனா தனது துடுப்பாட்ட ஆற்றலால் உயர்ந்து நின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## இலங்கைக்கு எதிரான இருபது-20; அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு!

சிட்னி, ஜன. 26

சிட்னியில் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள இலங்கை அணிக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, அரோன் பின்ஞ் தலைமையிலான 16 வீரர்களை உள்ளடக்கிய பெயர் பட்டியலை அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் நேற்று அறிவித்தது.

இந்த அணியில் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப மற்றும் முன்னணி வீரரான டேவிட் வோர்னர் இணைத்துக் கொள்ளப்படவில்லை. அதேநேரம் பிக்பாஸ் போட்டியில் அசத்திய பென் மெக்டெர்மாட் உள்வாங்கப்பட்டுள்ளார்.

போட்டிகள் பெப்வரி 11 முதல் சிட்னி, கன்பெரா மற்றும் மெல்பர்ன் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

அணி விவரம்: அரோன் பின்ஞ், அஷ்ரன் அகர், பட் கம்மின்ஸ், ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், மொய்சஸ் ஹென்றிக்ஸ், ஜோஷ் இங்கிலிஸ், பென் மெக்டெர்மாட், க்ளென் மக்ஸ்வெல், ஜே றிச்சர்ட்சன், கேன் றிச்சர்ட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிற்செல் ஸ்ரார்க், மார்கஸ் ஸ்ரொய்னிஸ், மத்தியூ வேட், அடம் சம்பா. (ஐ)



## இலங்கை அணியின் பயிற்றுநராக போல்!

கொழும்பு, ஜன. 26

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக முன்னாள் இங்கிலாந்து வீரர் போல் ஃபார்ப்ரேஸ் இரண்டு வருட கால இடைவெளியில் நியமிக்கப்படவுள்ளார்.

அடுத்த மாத இறுதியில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணத்தின் போது போல் ஃபார்ப்ரேஸ் இலங்கை அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக தமது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

உள்ளூர் ரசிகர்கள் மற்றும் வீரர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான மிக்கி ஆர்தர், கடந்த ஆண்டு டிசெம்பரில் தனது இரண்டு ஆண்டு கால தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவிக்காலத்தை நிறைவுசெய்தார்.

இந் நிலையிலேயே மிக்கி ஆர்தரின் இடத்தை போல் ஃபார்ப்ரேஸ் பூர்த்தி செய்யவுள்ளார்.

2014ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணியானது பங்களாதேஷில் இருபது-20 உலகக் கிண்ணத்தை வென்றபோது, அணியின் தலைமைப் பயிற்சியாளராக போல் ஃபார்ப்ரேஸ் செயல்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதியில் ஆஷ்லே!

மெல்பர்ன், ஜன. 26

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார் உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்ட்டி.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓப்பன் தற்போது நடக்கிறது. இதில் நேற்று நடந்த காலிறுதிப் போட்டியில் ஜெசிகா பெகுலாவை ஆஷ்லே எதிர்கொண்டார்.

அவுஸ்திரேலியரான ஆஷ்லே அமெரிக்கரான பெகுலாவை 6 -2, 6 - 0 என்ற கணக்கில் இலகுவாக வீழ்த்தினார். இவர் அரையிறுதியில் மேடிசன் கீஸை நாளை வியாழக்கிழமை எதிர்கொள்ளவுள்ளார். (ஐ)

## பதவி விலகுகிறார் ரொஷான் மஹாநம

கொழும்பு, ஜன. 26

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான ரொஷான் மஹாநம கிரிக்கெட் சபையின் ஆலோசனைக் குழுவிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஆலோசனைக் குழுவிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளமை குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு ரொஷான் மஹாநம அனுப்பி வைத்துள்ள எழுத்து மூல ஆவணத்திலும் குறிப்பிட்டுள்ளார் என்று அறிய வருகின்றது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி அன்று நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் தலைவராக அரவிந்த டி சில்வா நியமிக்கப்பட்டார். அவருடன், ரொஷான் மஹாநம, முத்தையா முரளிதரன், குமார் சங்கக்கார ஆகியோரும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே இந்த முடிவை,



தான் எடுத்ததாகவும் இலங்கை கிரிக்கெட் சபையுடன் இணைந்து சேவையாற்றுவதில் எவ்வித விருப்பமின்மையும் தனக்கில்லையென எவரும் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம் என ரொஷான் மஹாநம குறிப் பிட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ஐ)




## ஆஸி. ஓப்பன் ரென்னிஸுக்கு விடை கொடுத்தார் சானியா!

மெல்பர்ன், ஜன. 26

கலப்பு இரட்டையர் ஆட்டத்தின் காலிறுதியில் தோல்வியடைந்து அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியை விட்டு வெளியேறினார் சானியா மிர்சா.

6 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற 35 வயது சானியா மிர்சா. இரட்டையர் பிரிவில் உலகளவில் முதல்நிலை வீராங்கனையாகவும் இருந்துள்ளார்.

கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்ற முதல் இந்திய வீராங்கனையான இவர், கடந்த வருடம் செப்ரெம்பரில் இரட்டையர் ஆட்டத்தில் 43ஆவது பட்டம் வென்றார்.

இந்த வருடத்துடன் ரென்னிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற முடிவெடுத்துள்ளார் சானியா மிர்சா. 2022 அவுஸ்திரேலிய ஓபன் மகளிர் இரட்டையர் ஆட்டத்தின் முதல் சுற்றில் நாடியாவுடன் இணைந்து விளையாடி தோல்வியடைந்தார். அடுத்ததாக ராஜீவ் ராமுடன் இணைந்து கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் விளையாடினார்.

இதில், காலிறுதிக்கு முன்னேறிய சானியா மிர்சா - ராஜீவ் ராம் இணை, காலிறுதியில் ஜேசன் குப்ளர், ஜேமீ ஃபோர்லிஸ் இணைக்கு எதிராக மோதி 6-4, 7-6 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினர். (ஐ)

# தனியார் பஸ்களில் முற்கொடுப்பனவு அட்டை அறிமுகப்படுத்துவதில் தாமதம்

கொழும்பு, ஜன. 26

இலங்கையின் தனியார் பஸ்களில் முன்கூட்டியே கட்டணம் செலுத்தும் முறையான முற்கொடுப்பனவு அட்டையை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த முறைக்கு ஏற்கனவே இலங்கை மத்திய வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எனினும் அமைச்சு மட்டத்தில் இதற்கு இன்னும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

இந்த செயற்பாடு, நடைமுறைக்கு வந்தால், பயணிகள், தமது போக்குவரத்தின்போது நேரடியாக கட்டணத்தை செலுத்தாமல் முன்கூட்டியே கட்டணங்களை செலுத்திய அட்டைகளை பயன்படுத்துவர்.

இதன் காரணமாக, கட்டணங்களின் மீதித் தொகையை வழங்குதல் உட்பட்ட பல்வேறு சிக்கல்கள் தீர்க்கப்படும்-என்றார். (அ)

# தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்ய அழுத்தம்

## அமைச்சர் காமினி லொக்குகே தகவல்

கொழும்பு, ஜன. 26

**தனியார்துறையினரிடம் கூடுதல் விலை கொடுத்து மின்சாரத்தை கொள்வனவு செய்யுமாறு சில தரப்பினர், அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருவதாக அமைச்சர் காமினி லொக்குகே குற்றம் சுமத்தியுள்ளார்.**

தனியார் துறையினருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுமாறு இந்த தரப்பினர் அரசாங்கத்தை வலியுறுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் மாற்று வழிகளை பின்பற்றவில்லை என சில மின் பொறியியலாளர்கள் குற்றம் சுமத்துவதற்கான பின்னணி இதுவேயாகும் என அவர் தெரிவித்தார்.

வறட்சி நீடிக்கும்போது இவ்வாறு தனியார் துறையினரிடமிருந்து மின்சாரத்தை பெற்றுக் கொள்ள நேரிடும் எனவும், ஏப்ரல் மாதமளவில் இவ்வாறு மின்சாரம் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். தனியார் துறையினரிடம் மின்சாரம் பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கைகள் கடந்த ஆண்டு ரத்து செய்யப்பட்டன எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 - 02 - 1926

மறைவு 24 - 01 - 2022

## அமரர் சின்னத்தம்பி செல்லையா
(அருளி)

தென்மயிலை கட்டுவனைப் பிறப்பிடமாகவும், மிகுந்தபுரம், திருகோணமலை. பாரிஸ், பிரான்ஸை வதிவிடமாகக் கொண்டவருமான சின்னத்தம்பி செல்லையா அவர்கள் 24.01.2022 பிரான்ஸில் இயற்கை எய்தினார்.

அன்னார் செல்லையா - லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகனும். இளையதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், ரஞ்சிதமலர் (லண்டன்), சுகுமார் (பிரான்ஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்), சந்திரகுமார் (பிரான்ஸ்), ராஜ்குமார் (லண்டன்), டிலீப்குமார் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (லண்டன்), சாந்தமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும். ஸ்ரீவசந்தீஸ்வரன். இந்துமதி. நளாயினி. உலகநாயகி, தயாநந்தி. அனுஷா, தனுஷா, ஜெயப்பிரகாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், இரோத்தமி, பிரித்தமி, டிலுஜா. கிரிஷாந், நிதர்ஷன், விஜிதா, சிராணி. சிறீஸ். ரிஷானி, ரிஷாந், அக்ஷரா. அபினுஷன். சிந்துஜா, ஜெனிற்றா, சுகிற்றா ஆகியோரின் அன்புப் பேரனும். டினோஜி. டர்வினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம்

பார்வையிடும் நேரம்:

26.01.2022 புதன்கிழமை 15hoo - 16hoo

29.01.2022 சனிக்கிழமை 15hoo - 16hoo

02.02.2022 புதன்கிழமை 15hoo - 16hoo

இடம்: Furinarium, 52, Avenue du Marchal Leclerc, 92390 Villeneuve la Garenne அதே இடத்தில் 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் 11.30 மணிவரை கிரிகை நடைபெற்று. பின்ன ர் 12.30 மணி முதல் Crématorium, Pére Lachaise, 71 Rue des Rondeaux, 75020 Paris என்னும் இடத்தில் பார்வைக்கு வைத்து தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

**ரஞ்சிதமலர்: 004479 5438 7923**
**ராஜ்குமார்: 004478 3041 5599**
**சுகுமார் : 003360 2091 6995**
**டிலீப்குமார்: 003360 3977 5 15**
**விஜயகுமார்: 0033 6 99 39 19 99**
**ஜெயக்குமார்: 004478 38 14 1375**
**சந்திரகுமார்: 0033 6 12 44 26 13**
**சாந்தமலர்: 004478 81 02 30 93**

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

# மூடிய அறைகளில் கற்பித்தலில் அவதானமாக இருக்கவேண்டும்

## சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 26

தற்போது பாரியளவிலான பாடசாலை மாணவர்கள்கோவிட் தொற்றுக்குள்ளாவ தால் மூடிய அறைகளில் கற்பது தொடர்பில் தீவிர அவதானம் செலுத்த வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

மாணவர்கள் கோவிட் தொற்றுக்குள்ளாகுவது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த இரண்டு வாரங்கள் இலங்கைக்கு மிகவும் அவதான மிக்கவை.

தற்போது பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும், பதிவாகாத நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் இருக்கலாம்.

தடுப்பூசி போடாதவர்களும், சமூகத்தில் பரவி வரும் கட்டுக்கதையால் தடுப்பூசி போடுவதில் தாமதம் செய்பவர்களும் கடும் ஆபத்தில் உள்ளனர். ஒமைக்ரோன் மாறுபாடு அவ்வளவு தீவிரமானது அல்ல என்று பரவலாக நம்பப்பட்டாலும் பலர் இன்னும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

அறிகுறிகளுடன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட அளவை விடவும் அதிக மாணவர்களை வரையறுக்கப்பட்ட இடங்களில் வைத்திருந்தால், கவனமாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் சுகாதார கட்டமைப்பினால் தாங்கிக் கொள்ள முடியாத அளவில் கோவிட் கொத்தணிகள் உருவாகும் வாய்ப்பு உள்ளது.

எனவே, பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறிப்பாக தங்கள் பிள்ளைகள் மற்றும் அவர்களின் சுகாதார நடைமுறைகள் மீது மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

திருமணங்கள், பொதுக்கூட்டங்கள், மக்கள் கூடும் இடங்கள், அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் தொற்றுகள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன. அடுத்த இரண்டு வாரங்கள் அவதானமாக செயல்படவில்லை என்றால், மருத்துவமனை கட்டமைப்பு மற்றும் சுகாதாரத் துறையினரால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு தொற்றாளர்கள் அதிகரிக்கக்கூடும்-என்றார். (அ)

# மேலும் இரண்டு எம்.பிக்களுக்கு கொரோனா!

கொழும்பு, ஜன. 26

இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களை தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளான எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. (அ)

# டொலர் நெருக்கடி 2029 வரை நீடிக்கும்!

## மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்



கொழும்பு, ஜன. 26

2029ஆம் ஆண்டு வரை நாம் கடன்களை செலுத்தவேண்டியிருப்பதால், 2029ஆம் ஆண்டு வரை டொலர் நெருக்கடி நீடிக்கும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகின்றது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2020ஆம் ஆண்டில் எம்மிடம் இருந்த கையிருப்பை விட அதிகளவு கடன்களை செலுத்தினோம். 2021ஆம் ஆண்டும் இதே நிலைமையே காணப்பட்டது. அதன் ஊடாக நாம் கையில் இருக்கின்ற இருப்பை தாண்டி எமக்கு வரவிருக்கின்ற நிதி மூலங்களையும் கணக்கில் எடுக்க வேண்டும்.

நிச்சயமாக 2022ஆம் ஆண்டில் செலுத்தப்படவேண்டிய கடன் முறையாக செலுத்தப்படும். இருக்கின்ற கையிருப்பை தாண்டி புதிதாக டொலர் வருமானத்தைப் பெற்று கடன்களை முறையாக செலுத்துவோம்.

சிமெந்துக்கான கேள்வி அதிகரித்திருக்கின்றது. பாரியளவில் நிர்மாணப்பணிகள், அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன.

அவ்வாறு நிர்மாணப்பணிகள் இடம்பெறும்போது சிமெந்துக்கான கேள்வி அதிகரிக்கும். கேள்வி அதிகரிக்கும்போது எம்மால் பொருட்களை விநியோகிக்க முடியாமல்போகும்.

அமெரிக்காவில் 40 வருடங்களின் பின்னர் பணவீக்கம் அதிகரித்திருக்கின்றது. அவ்வாறு உலக சந்தையில் பொருட்களின் விலை அதிகரிக்கும்போது உள்நாட்டில் அந்த பொருட்களின் விலை அதிகரிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். இல்லாவிடின் வர்த்தகர்கள் இறக்குமதி செய்ய தயங்குவார்கள்-என்றார். (அ)

## அரசியல்...

கின்றது."- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

வடக்கில் நேற்று ஆரம்பமான நீதிக்கான அணுகல் சேவை வேலைத்திட்டம் தொடர்பில் நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

"சிறைக்கைதிகளும் மனிதர்களே என்ற வாசகத்தை மாத்திரம் எழுதிவைப்பதால் சிறைக்கைதிகள் பாதுகாக்கப் படப்போவதில்லை. கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற தாக்குதல்கள், அச்சுறுத்தல் செயல்பாடுகள் குறித்து நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். இதனை ஒருபோதும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இதேபோல் இவ்வாறான ஒரு சில சம்பவங்கள் இடம்பெறுகின்ற காரணத்துக்காக ஒட்டுமொத்த சிறைச்சாலை கட்டமைப்பையும் தவறாகச் சித்தரிக்கவும் முடியாது.

சகல நாடுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மாறாக இலங்கையில் மாத்திரம் இவை இடம்பெறுவதாகக் கூறவும் முடியாது. எவ்வாறு இருப்பினும் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாத வகையில் சகல தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒரு சிலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை தமிழ் அரசியல் கைதிகள் என கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டில் பயங்கரவாதச் செயல்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் அவர்கள் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எவ்வாறு இருப்பினும் இந்தப் பிரச்னைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதையே ஜனாதிபதியும் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு தற்போது முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வது குறித்து ஆராயும் விதமாக ஜனாதிபதியால் நிபுணர்கள் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. 42 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நீண்ட காலத்துக்கு இந்தப் பிரச்னைகளை இழுத்துக்கொண்டு செயல்பட அரசு தயாராக இல்லை. பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வொன்று அவசியம் என்பதையே ஜனாதிபதியும் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்தார். எனவே, அது குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படும்" - என்றார். (ஐ)

## தயா...

சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

குறிப்பாக கடந்த 2009ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 2009 மே 18ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் தடை செய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பாக குறித்த வழக்கு தொடரப்பட்டது.

2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுத்தல் விதிகளின் கீழ் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றத்தைப் புரிந்துள்ளதாக வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றுவந்த நிலையில் நேற்று வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. வழக்கில் தயா மாஸ்டருடன் அவர் சார்பாக சட்டத்தரணி எம்.எ. சுமந்திரன் ஆஜராகினார்.

குறித்த வழக்கில் தயா மாஸ்டருக்கு கட்டாய சிறைத்தண்டனை வழங்க வேண்டிய பிரிவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அந்த குற்றப்பத்திரிகை திருத்தப்பட்டு குறைந்த குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் அவர் மீது முன்வைக்கப்பட்டிருந்தன.

அதன்படி அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (அ-03)

## நாளை வரை...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலை வர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் எரி பொருள் விநியோகம் கிடைப்பதை பொறுத்து நிலைமை மீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதியுடன் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பேச்சைத் தொடர்ந்து மின்விநி யோகத்தை துண் டிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

அத்துடன், மின்விநியோகத்தை திட்டமிட்டு துண்டிக்கும் தரப்பினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## அறிகுறி...

நாட்டில் ஒமைக்ரோன் வைரஸ் தொற்றுப்பரவல் அதிகமாக பரவுகிறது என்று தெரிவிக்கப்படும் நிலையில் சுகாதார பணியகத்தின் அவதானிப்புகள் குறித்து தெரிவிக்கும்போதே சுகாதார பணியகத்தின் பிரதி சுகாதார பணிப்பாளர் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் இதனை தெரிவித்தார்.

ஒமைக்ரோன் வைரஸ் தொற்றுப்பரவலின் அதிகரிப்பு தன்மை காணப்படுகின்றது. தொடர்ச்சியாக ஆறாவது நாளாகவும் 800 இற்கும் அதிகமான வைரஸ் தொற்றாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த 24 நாட்களில் 15 ஆயிரத்து 197 கோவிட் வைரஸ் தொற்றாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரகாலத்தில் நாட்டில் மீண்டும் கோவிட் 19 வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காட்டுகின்றது. ஒமைக்ரோன் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை பாரதூரமான விடயமாகும் என்றும்சொன்னார். (ஐ)

## கொழும்பு...

வடக்கு மாகாணத்திலிருந்து பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தி கொழும்பு சென்று திரும்புவோரில் பலர் காய்ச்சலுடன் மருத்துவமனைகளுக்கு வருகை தரும் நிலையில் அவர்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்றுள்ளமை கண்டறியப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் தேவையற்று கொழும்பு செல்வதையோ அல்லது பொதுப்போக்குவரத்தை தேவையின்றி பயன்படுத்துவதையோ தவிர்ப்பது மீண்டுமொரு கோவிட்-19 அலையை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியும் என்று சுகாதார அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கண்டறியப்படும் கோவிட்-19 நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கையை அடுத்து மருத்துவமனையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இன்று புதன்கிழமை உயர்மட்ட கலந்துரையாடலை மருத்துவமனை நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ளதாக அறிய முடிகிறது. (ஐ)

# புதிய பஸ் நிலையத்திலிருந்து பெப். 1 முதல் பேருந்து சேவை!

கொழும்பு, ஜன. 26



யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு, சேவை இடம்பெறாமலுள்ள புதிய பேருந்து நிலையத்தில் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் சேவைகள் இடம்பெற வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற, வீதி போக்குவரத்து நெருக்கடியை குறைப்பது தொடர்பான கலந்துரையாடலில் வட மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, கருத்து வெளியிட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சிவராசா சிவபரன், "முதல்கட்டமாக தமது சேவைகளை பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்ததோடு, தம்மைத் தொடர்ந்து இலங்கை போக்குவரத்து சபையினரும் அங்கு சேவையில் ஈடுபடவேண்டும்" எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பில் தொழில்சங்கத்தினருடன் கலந்துரையாடலொன்றை நடத்திய பின்னர் தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதாக இ. போ. ச வட மாகாண பிராந்திய முகாமையாளர் செல்லத்துரை குணபாலசெல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதி மகேசன், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். பி கருணாசிங்கன் மற்றும் முக்கிய அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வு கிளிநொச்சியில் 12 பேர் கைது!

கிளிநொச்சி, ஜன. 26

கிளிநொச்சி - கல்மடுகுளம் ஆற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 12 பேரை ட்ராக்டருடன் கைது செய்த இராணுவத்தினர் அவர்களை தருமபுரம் பொலிஸில் ஒப்படைத்தனர்.

மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனத்துக்கு எந்த அனுமதிப் பத்திரங்களும் இல்லை என்றும், அத்துடன், மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படாத இடத்தில் கைதானவர்கள் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தனர்.

கைதான 12 பேரையும் தருமபுரம் பொலிஸாரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## உயர்கிறது...

களில் 3 பேரும் அடங்குவர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி நாட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்து 330 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## மணல்...

ஸார் தெரிவித்தனர்.

இந்த நீதிமன்ற நடவடிக்கைகள் ஊடாக ஒரு கோடியே 98 இலட்சத்து 89,500 ரூபாய் அபராதம் அறவிடப்பட்டுள்ளன. இதேவேளை, 1,005 கியூப் மணல் அரசு உடமையாக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்ட ரீதியற்ற மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி, பல்வேறு தரப்பினரும் தமது கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரதமர்...

நீண்ட காலமாக பிரதமரின் பிரத்தியேக மருத்து வராக செயல்பட்டு வரும் மருத்துவர் நரேந்திர பிந்தும் இந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தில் வசித்துவரும் மருத்துவர் நரேந்திர பிந்த், இலங்கை வரும்போது இந்த சத்திரசிகிச்சையை மேற்கொள்வதாக முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது என்று அறிய வருகின்றது.

எவ்வாறாயினும், சத்திரசிகிச்சைக்குப் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நலமுடன் இருக்கிறார் என்று பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## மீண்டும் அஜித்...

பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக 5 முறை பணியாற்றியிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, தற்போது குற்றம் மற்றும் போக்குவரத்துப் பிரிவின் பிரதானியாக பணியாற்றி வருகின்றார்.

இந்நிலையிலேயே அவர் மீண்டும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஓட்சிசன்...

பூஸ்டர் டோஸ்களை மக்கள் புறக்கணிப்பதாலும் நோயாளிகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் உயரக்கூடும் என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை, வீடுகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 347 ஆக உள்ளது. முந்தைய எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது கணிசமான உயர்வு என்றும் மருத்துவர் அன்வர் ஹம்தானி குறிப்பிட்டார். (ஐ)

## 55 இந்திய...

கும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதகால சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களின் கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டதுடன், 5 வருட காலத்தில் மீண்டும் இலங்கை பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை உடனடியாக கைது செய்வதற்கும் நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு எடுக்கப்பட்ட நிலையில் இந்திய மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் இலங்கை குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் ஊடாக இந்தியாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவும் நீதிவான் உத்தரவிட்டார்.

ஈழநாடு
Eelanadu

# மணல் கடத்தியவர்கள்மீது இராணுவம் துப்பாக்கி சூடு!

## கொடிகாமத்தில் சம்பவம்

தென்மராட்சி, ஜன. 26

மணல் கடத்தலில் ஈடுபட்ட கும்பல் மீது இராணுவத்தினர் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். இதையடுத்து, ட்ராக்டரை கைவிட்டு கடத்தல் கும்பல் தப்பியோடியுள்ளது. எனினும், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கொடிகாமம் - கெற்பேலி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மணல் கடத்தல் இடம்பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து, சம்பவ இடத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர் கடத்தல்காரர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்தனர். இதன்போது அவர்கள் தப்பியோட முயன்றனர். இதனையடுத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இந்த சம்பவத்தையடுத்து உழவு



இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதி கைது செய்யப்பட்டார்.

உழவு இயந்திரத்தைக் கைப்பற்றிய இராணுவத்தினர் அதன் சாரதியையும் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ஐ)

# மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வரின் வழக்கு ஒத்திவைப்பு



மட்டக்களப்பு, ஜன. 26

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளருக்கு எதிராக மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வரால் தொடரப்பட்ட வழக்கு, பெப்ரவரி மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் ஆணையாளரின் பூர்வாங்க ஆட்சேபனை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையால் ஆணையாளருக்கு வழங்கப்பட்டு, மீளப் பெறப்பட்ட அதிகாரங்களில் மாநகர ஆணையாளர் தலையீடு செய்வதை தடுக்கக் கோரி, மாநகர முதல்வரால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை, மட்டக்களப்பு மேல் நீதிமன்றில், நீதிபதி என்.எம்.அப்துல்லா முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வழக்கில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்-

சென்ற தவணையில் விசாரணைக்காக இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஆணையாளர் சார்பில் ஒரு பூர்வாங்க ஆட்சியர் படையொன்று எழுப்பப்பட்டு இருந்தது. அதாவது முதல்வர் தாக்கல் செய்த எதிர் சத்தியக்கூற்று பிரதி தனக்கு கொடுக்கப்படவில்லை. ஆதலால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றொரு ஆட்சேபனை ஆணையாளரால் எழுப்பப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. நீதிபதி அதற்கான கட்டளையை ஆற்றியுள்ளார். ஆணையாளர் சார்பாக எடுக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அதை நிராகரித்து வழக்கு விசாரணைக்காக எழுத்து மூலம் சமர்ப்பிப்பதற்காக பெப்ரவரி 21ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டிருக்கிறது - என்றார். (அ)

# பரீட்சை கடமைகளிலும் அரசியல் தலையீடுகள்!

## அரசை சாடுகிறார் இம்ரான் மஹ்ரூப் எம்.பி.

திருமலை, ஜனவரி 26



சுயாதீனமாக செயற்பட வேண்டிய பரீட்சைக் கடமை நியமனங்களிலும் அரசியல் தலையீடு இடம்பெறுவது, இந்த அர சின் கேவலமான செயல்களில் ஒன்றாகும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

திருகோணமலை மாவட்டத்தில் 5ஆம் தர மற்றும் உயர்தரப் பரீட் சைக் கடமை நியமனங்களில் வழமைக்கு மாறாக இம்முறை பல முறைப்பாடுகளை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

அதாவது, இந்தப் பரீட்சைக் கடமை நியமனங்களில் வழமை யாகப் பின்பற்றப்பட்டு வந்த இனச் சமநிலை பின்பற்றப்படவில்லை. குறிப்பாக, முஸ்லிம் அதிபர், ஆசிரி யர்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த வர்கள் புல்மோட்டை, கோமரங் கடவெல போன்ற தூரப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை, குச்சவெளி போன்ற பிரதேசத்தவர்களே வழமையாக இப்பகுதி பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்டனர். இம்முறை சிரமப்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

வழமையாக வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் வழங்கப்படும் பெயர்ப் பட்டியல்களிலிருந்தே பரீட்சைக் கடமை நியமனங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு செய் தவதனூடாக சிரேஷ்டத்துவம், தகைமை என்பன கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கும். இம்முறை இந்த நிலை பின்பற்றப்பட வில்லை. இதனால் முதலாந்தர அதிபர், ஆசிரியர்கள் உதவி மேற்பார்வையாளர்களாக இம்முறை நியமிக்கப்பட்டுள் ளனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர்ப்பட்டியலுக்கு வெளியே நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசியல் ரீதியாக வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியலிலிருந்தே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றனது. நிமயனக் கடிதங்களில் கூட பெயர், தரம் மற்றும் பாடசாலை என்பன சரியாகக் குறிப்பிடப்படாது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேர்மையாக நடக்கவேண்டிய பரீட்சைக் கடமைகளில் இவ்வாறான தலையீடுகளும், இன ரீதியான புறக்கணிப்புகளும் பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத் தன்மை கேள்விக்குறியாகிவிடும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்-என்றுள்ளது. (அ)

# தேவாலயத்தில் கைக்குண்டு; உடனடி விசாரணையை ஆரம்பிக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஜன. 26

பொரளை அனைத்து புனிதர்களிள் தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள பொரளை தேவாலயம் ஒன்றில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக இலங்கை பொலிஸார் அண்மையில் அறிவித்தனர்.

அதன்படி, மாலை 4.45 மணியளவில் தேவாலயத்தின் பிரதான நுழைவாயிலுக்கு வலதுபுறம் உள்ள சிலைக்கு அருகில் அந்தகைக்குண்டு கண்டுபிக்கப்பட்டது.

இதனையடுத்து, இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதனையடுத்து, சந்தேகநபர்கள் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# ஹோமாகம வைத்தியசாலையில் 23 பணியாளர்களுக்கு கொரோனா!

கொழும்பு, ஜன. 26

ஹோமாகம ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் ஜனித் ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி, 3 மருத்துவர்கள், பதினொரு தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணிக்குழாமைச் சேர்ந்த ஒன்பது பேரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக அவர் கூறினார்

இதேவேளை, ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

அதன்படி, குறித்த வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெறும் இரண்டு சிகிச்சை அறை களில் 75 படுக்கைகளே உள்ளன. எனினும், தற்போது 81 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்

6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்

6.55 மணி : இன்றைய ராசி பலன்

7.15 மணி : கதை வழி அறமொழி

7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்

7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : தொடர்நாடகம்

11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )

1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நிமிர்ந்து நில், ஓ காதல் கண்மணி திரைப்படங்களின் காட்சிகள்

4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்

6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**

7.00 மணி : பாரதி



8.00 மணி : இரவுச் செய்திகள்

9.00 மணி : துறைக்கு அப்பால்-சிதம்பரம் மோகன்



9.30 மணி: பத்துக்கு 10

10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிலி

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்

06.00 மணி : சுப்ரபாதம்

06.30 மணி : சுப்ரபாதம்

07.00 மணி : இன்றைய சிந்தனை

07.05 மணி : இன்றைய நாள்

07.20 மணி : ஈழத்து சித்தர்கள்

07.30 மணி : மங்கள இசை

08.00 மணி : அருளுரை

08.30 மணி : திருவாசகம்

09.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பஜனை

10.30 மணி : தமிழககோவில் திருவிழா

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்

07.30 மணி : அருளுரை

08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

8.00 மணி : ஜெபமாலை

9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)

10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)

04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

06.00 மணி : இயேசுவின் போதனைகள்

07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஜ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு